Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்

பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7893

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 13ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 15 (28.11.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:59

## முதன்மைச் சுடரை ஏற்றி தலைவர் பிரபா அஞ்சலி!

(கிளிநொச்சி)

தாயக விடிவுக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் வகையில் - நேற்று மாலை 6.07 மணியளவில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயத்தில் முதன்மைச் சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

முக்கிய தளபதிகள், பொறுப்பாளர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் மாவீரர்களுக்கான அக வணக்கத்தைத் தொடர்ந்து தேசியத் தலைவர் வே.பிரபாகரன் முதன்மைச் சுடர் ஏற்றினார்.

இதேவேளை, தாயகப் பிரதேசத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் தளபதிகளும், பொறுப்பாளர்களும் பொதுச்சுடரேற்றி வைத்தனர். அதேவேளை மாவீரர்களின் கல்லறைகளில் பெற்றோர், உரித்துடையோர் ஈகச்சுடரேற்றி வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி கோவிந்தன்கடைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் மாவீரர்களது நினைவு மண்டபத்தில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

முழங்காவில் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றினார். (12 ஆம் பக்கம் பார்க்க)



# உடனடியாகப் பேச்சுக்கு வராவிடின் சுதந்திரத்துக்கான போரில் குதிப்போம்!



## தலைவர் பிரபா எச்சரிக்கை

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் நிபந்தனையற்ற முறையில் காலம் தாழ்த்தாமல் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து காலத்தை இழுத்தடித்து எமது மக்களின் துயரவாழ்வை நீடித்துச்செல்ல சிங்கள அரசு முற்படுமானால் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறுவழியில்லை என்று தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டு துயிலுமில்லங்களில்

## லட்சக்கணக்கான மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளான நேற்று - தாயக விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூருவதற்காக யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் லட்சக்கணக்கான மக்கள் ஒன்று கூடினர்.

கோப்பாய், சாட்டி, எள்ளங்குளம், கொடிகாமம், ஆகிய துயிலுமில்லங்களிலேயே லட்சக் கணக்கான மக்கள் நேற்று மாலை- ஒன்று கூடி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

வலிகாமத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் இடம் பெற்றன.

மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் என மூன்று இடங்களில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் துயிலுமில்லத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு அவர்கள் மாவீரர்களின் கல்லறைகள் மற்றும் நினைவுக் கற்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதன் பின்னர் மாலை 5.40 மணிக்கு தேசியத் தலைவரின் மாவீரர்தின உரை ஒலிபரப்பப்பட்டு 6.05 இற்கு நிறைவடைந்ததும் நினைவொலி எழுப்பப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன் பின்னர் 6.07 இற்கு துயிலுமில்ல பொதுச் சுடரினை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். அடுத்து மாவீரரின் பெற்றோர் மற்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் முன்பாக மாவீரர்களுக்கு ஈகச்சுடர்

### கூட்டமைப்பு எம்.பிக்கள் ஏற்றினர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களின் நினைவாக நேற்று மாலை நாடாளுமன்ற வளாகத்துள் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் நினைவாக ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியது இதுவே முதற்தடவையாகும்.

நேற்றுமாலை 5.55 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்தில் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர்தின உரையை தொடர்ந்து நாடாளுமன்றமுன்றலில் 21 ஈகச்சுடாகள் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் மாவீரர்கள் நினைவாக உரையாற்றினார்.

இதேவேளை களுத்துறை சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் நேற்று மாலை சிறைச்சாலைக்குள் மாவீரர்களின் நினைவாக ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிப் போராளிகளும் சிறைச்சாலைக்குள் ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# உடனடியாகப் பேச்சுக்கு வராவிடின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!*

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிக்கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்னாள்.

எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இத் திருநாளில் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்திற் கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது வீர விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம். உலகமே வியக்கும் வகையிற் போர் அரங்குகளில் எதிரிப் படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம்.

சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும்பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுளபட்ட சிறீலங்கா அரசினது ஆயுதப் படைகளுக்கு ஈடாகப் படை வலுச் சமநிலையை நிலைநாட்டினோம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேச மயப்படுத்தி, உலகத்தின் கவனத்தை எம்மீது திருப்பினோம்.

எனினும் எமது மாவீரர் கண்ட இலட்சியக் கனவு இன்னும் நிறைவு பெறவில்லை. எமது தாயக மண் இன்னும் முழுமையாக விடுதலைபெறவில்லை. எமது மக்கள் இன்னும் பூரண சுதந்திரம் அடைந்து விடவில்லை.

தமிழீழத்தின் தொன்மைவாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்களும் பட்டினங்களும் அங்கு வாழ்ந்துவரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கிறார்கள்.

தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கானோர், தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்பமுடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொடர்கிறது. தேச விடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவுகண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவு பெறவில்லை.

*எனது அன்பான மக்களே!*

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப் பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்.

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப் போருக்கு நாம் ஓய்வுகொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதிகாத்த இக்கால விரிப்பில், சமாதான வழிமூலமாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண - எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நோர்வே நாட்டை நடுநிலையாளராக ஏற்று, அந்நாட்டின் அனுசரணையுடன் உலக நாடுகள் சிலவற்றின் தலைநகர்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் எமது விடுதலை இயக்கம் பங்குபற்றியது. ஆறு மாதங்கள் வரை நீடித்த ஆறு சுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றதாகிப் பயனற்றுப் போயின.

நெருக்கடி நிலையைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவித்து, இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தவும், அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கவும், போரினாற் பேரழிவுக்கு ஆளான கட்டுமானங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் நிறுவப்பட்ட உப குழுக்கள் செயலிழந்து செத்துப்போயின.

இவை ஒருபுறமிருக்க, சிறிலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வொஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையில்தான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடை நிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது.



எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை. பேச்சுக்களை இடைநிறுத்தம் செய்த இடைவெளியில், ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்ட வரைவை முன்வைக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவின் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம்.

நீண்ட காலப் போரினாலே பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுக்கொடுக்கவும் சிதைந்துபோன தமிழர் தேசத்தை மீள்நிர்மாணம் செய்யவும் கணிசமான அதிகாரத்துடன் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமென்பதை வலியுறுத்தினோம்.

ஒன்றுக்குப் பின் ஒன்றாக ரணிலின் அரசு முன்வைத்த, இடைக்கால நிர்வாகம் பற்றிய மூன்று வரைவுகளும் எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் நிர்வாக வலுவற்றதாக இத் திட்ட வரைபுகள் அமையப்பெற்றதால் எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இறுதியில், ஓர் இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை நாமாகத் தயாரித்துக் கொடுக்க முடிவெடுத்தோம். பல மட்டங்களிலே தமிழீழ மக்களின் கருத்தைப் பெற்று, வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தைத் தயாரித்தோம்.

இத்திட்டம் புதுமையானது நடைமுறைச் சாத்தியமானது. எமது மக்களின் அவசரமான வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் இதன் கட்டமைப்பு நெறிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளைத் தாமதமின்றிச் செயற்றிறனுடன் நிறைவுசெய்ய வழிவகுக்கும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமையப்பெற்றது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன், ஊடகங்கள் வாயிலாகப் பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வரவேற்கத் தவறவில்லை.

நீண்ட காலத்தின் பின்பு முதல் தடவையாக விடுதலைப் புலிகள் தமது அரசியல் சிந்தனைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந்த நாடுகள் திருப்தி தெரிவித்தன.

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைபுகளைப் பார்க்கிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்று குறிப்பிட்ட அரசாங்கம், எமது யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது.

ஆனால், அதேசமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரமெனக் கண்டித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க ஒருபடி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது.

பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டதால், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிப்பீடம் அதிகார வலுவிழந்து ஆட்டம் கண்டது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்குள் ஜனாதிபதி சந்திரிகாவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசாங்கம் கவிழ்ந்தது.

இந்த ஆண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத்தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்களப்பௌத்த பேரினவாத சக்திகள், என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இந்தப் பொதுத்தேர்தல் வழிவகுத்தது.

இனவாதமும், மதவாதமும் பழமைவாதக் கம்யூனிசமும் ஒன்று கலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த, தமிழர் விரோதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இந்தத் தேர்தலில் கணிசமான ஆசனங்களைப்பெற்று மூன்றாவது பிரதான அரசியல் கட்சியாக வெற்றிபெற்றது.

இந்த இனவாதக் கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச் சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப்பெற்றது.

பொதுசனத் தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கிற் சிங்களப்பௌத்த மேலாண்மைவாதம் வலுப்பெற்ற அதே சமயம், தமிழரின் தாயகமான வடகிழக்கில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாகத் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்றது. எமது விடுதலை இயக்கத்தின் அரசியல் இலட்சியத்திற்கு மக்கள் சக்தியின் ஏகோபித்த ஆதரவு கிட்டியது.

தமிழீழ மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற வெகுசன அங்கீகாரமும் எமது விடுதலை இயக்கத்திற்கு வழங்கப்பட்டது. எமது இயக்கம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்திற்கு எமது மக்களின் மனுவும் கிடைத்தது. விடுதலைப் புலிகளின் இலட்சியக் குரலாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபத்திரெண்டு ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது.

இந்தப் பொதுத் தேர்தலானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாகப் பிளவுபடுத்தியது. கருத்தாலும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு, மாறுபட்டு, முரண்பட்டு நிற்கும் இரு மக்கள் சமூகங்களாகப் பிரிவுறச் செய்தது.

தென்னிலங்கையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்து, அரசியலதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்தபோதும் நாம் தொடர்ந்தும் அமைதி பேணி, சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பினோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயாரென்பதை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாகச் சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்திற்கு அறிவித்தோம். அவ்வேளைதான் அரச கூட்டணிக்குள் குழப்பமும் கொள்கை முரண்பாடும் தலைதூக்கின.

அரச கூட்டணிக்குள் ஆதிக்க வலுவுடைய கட்சியான ஜே.வி.பி, சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும் ஆட்சியதிகாரமும் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தது. மூன்றாம் தரப்பு நடுநிலையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசையும் வன்மையாகக் கண்டித்தது. நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை முற்றுமுழுதாக நிராகரித்தது.

எமது திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமானால் அரச கூட்டணியிலிருந்து வெளியேறிவிடப் போவதாகவும் மிரட்டியது. சமாதானப் பேச்சுக்கும் சமரச முயற்சிக்கும் எதிரான ஜே.வி.பியினரின் தீவிரவாதக் கடும்போக்கு, சந்திரிகா அம்மையாருக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இந்நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

சமாதான வழிமுறையைப் பேணி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்ற சர்வதேச அழுத்தம் ஒருபுறமும், பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னேற்றம் (11 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழருக்கு பாதிப்பு ஏற்படும் நடவடிக்கைகளில் இந்திய அரசு இறங்காது

## பாதுகாப்பு துணை அமைச்சர் பிரணாப்முகர்ஜி



(புதுடெல்கி)

இலங்கைத் தமிழர் நலனுக்கு எதிராக இலங்கை அரசுடன் - இந்தியா எந்தவிதமான பாதுகாப்பு உடன்பாடும் செய்துகொள்ளாது என்று ம.தி.முகவுகக்கு மீண்டும் இந்திய மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒருங்கிணைப்புப் குழுக்கூட்டத்தில் ம.தி.மு.க எம்.பி எல்.கணேசன் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியபோது, பாதுகாப்புத் துணை அமைச்சர் பிரணாப்முகர்ஜி மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இலங்கையுடன் - பாதுகாப்பு உடன்பாடு மற்றும் பலாலி இராணுவத்தளப் புனரமைப்புத் தொடர்பாக உத்தேச உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எல்.கணேசன் இதைக் கிளப்பினார்.

இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடமுடியாது என்று இந்தியா ஒதுங்கி நின்றுவிட முடியாது.

அங்கு மீண்டும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டால், ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியாவுக்குத் தான் அகதிகளாக வருவார்கள். அதனால் இந்தப் பிரச்சினையை அலட்சியமாகக் கருதக்கூடாது.

இலங்கைத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்படும் பலாலி விமானத் தளத்தை இந்தியா சீரமைத்துக் கொடுக்கும் வகையில் எந்த உடன்பாடும் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தினர்.

ஏற்கனவே தெரிவித்த கருத்தை மீண்டும் வலியுறுத்திய பிரதமர், அது குறித்து விளக்கமளிக்குமாறு பிரணாப் முகர்ஜியைக் கேட்டுக் கொண்டார்.

நீங்கள் சொல்வதுபோல எதுவும் நடக்கவில்லை. எந்த உடன்பாடும் செய்யப்படவில்லை. இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் இந்த அரசு இணங்காது என்று கணேசனிடம் தெரிவித்தார் முகர்ஜி.

இதேவேளை, இலங்கை அரசின் பிடிவாதத்தால் நின்றுபோன அமைதிப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர இந்தியா முயற்சி எடுக்க வேண்டும் என்றும் எல்.கணேசன் கோரிக்கை விடுத்தார்.

# படையினர் - புலிகள் மன்னாரில் சந்திப்பு!

(மன்னார்)

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளும், படைத்தரப்பினரும் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

சர்வதேச யுத்தநிறுத்தக் குழுவின் மன்னார் மாவட்டப் பிரதிநிதி தலைமையில், மன்னார் மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், நிர்வாகப் பொறுப்பாளர் ஜோசப் ஆகியோரும் படையினர் தரப்பில் மன்னார் நகர இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெயவீர, மன்னார் மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மாவீரர் தின நிகழ்வுகளின் போது, படையினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டதற்கு மன்னார் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இனியவன் பலத்த கண்டனத்தைத் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் இத்தகைய அசம்பாவிதங்கள் இடம்பெறாமற் தடுப்பது என்றும், இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய படையினரை இனங்கண்டு சட்டத்தின் முன்நிறுத்துவது என்றும தீர்மானிக்கப்பட்டது. (201)

# வரவு - செலவுத்திட்ட பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்ட பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவை வழங்குவதற்கு முடிவு செய்திருப்பதாக அந்தக் கட்சியின் உபதலைவர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்கான விசேட அறிக்கையொன்று எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் 50 ஆவது வருடாந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்காமல், அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதனால் அந்தப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதில் அரசுக்கு எந்தவித சிக்கலும் இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது. (தே)

# மரணதண்டனையை நிறைவேற்றும் அலுகோசுவுக்கு மரண அச்சுறுத்தல்

தூக்குத்தண்டனைகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அலுகோசுவுக்கும், பாதாள உலகக் கோஷ்டியினரால் மரண அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் தொடுக்கப்பட்டுள்ளமையால், அந்தப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்வதற்கு அவர் முடிவு செய்திருப்பதாகச் சிறைச்சாலைத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

அலுகோசுவாகச் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் குடும்ப விபரங்கள் என்பன அண்மையில் ஊடகங்களில் வெளியாகி இருந்தன. அதனையடுத்தே இந்தச் சிக்கல் நிலைமை எழுந்துள்ளது.

கடந்த சில நாட்களாக அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் மூலமாகவும், சிறையிலுள்ள பாதாள உலகக் கோஷ்டியினர் மூலமாகவும் இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. ஆகையால், தனது வேலை உரிய முறையில் நடைபெறவேண்டுமானால், தனது குடும்பத்தினருக்கும், தனது வீட்டுக்கும் விசேட பாதுகாப்பு வழங்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கருத்துத் தெரிவிக்கையில் -

அலுகோசுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பணி தனது திணைக்களத்துக்கு அல்ல எனக் குறிப்பிட்டார். இதே வேளை, மரணதண்டனை நிறைவேற்றுவதன் பொருட்டான அரச வர்த்தமானி அறிவிப்புக்கு ஜனாதிபதி சந்திரிகா இதுவரை ஒப்பமிடவில்லை எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதனால் மரண தண்டனை நிறைவேற்றும் நடவடிக்கையை செயற்படுத்துவதில் மேலும் கால தாமதங்கள் ஏற்படலாம் எனவும் சிறைச்சாலைத் தகவல் தெரிவிக்கின்றன. (தே)

## 2006 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை 2006 ஆம் ஆண்டு நடாத்துவதெனத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தீர்மானித்துள்ளதெனத் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பிற்கு அமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டிலேயே நடத்தப்படவேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (தே)

# வந்தாறு மூலையில் இளைஞர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்று முன்தினம் மாலை இளைஞரொருவர் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் தனது வீட்டுக்கு முன்பாக நின்று கொண்டிருந்த போதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தலையில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே இந்த இளைஞர் உயிரிழந்தார்.

இவர் இராமநாதன் பரஞ்சோதி (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## வவுனியா மாவட்டத்தில்

# முறுகல் நிலையைத் தணிக்க படையினர் - புலிகள் இணக்கம்!



வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாவீரர்தின நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பாக, ஏற்பட்ட முறுகல் நிலைகளைத் தணிக்கும் வகையில், புலிகள் மற்றும் படைத்தரப்புக்களுக்கிடையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையில் சந்திப்பு இடம்பெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறுவ் ஹொவ்டே தலைமையில் - வவுனியா வைரவப் புளியங்குளத்திலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் படையினர் தரப்பில் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷ, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த வத்தேவல, பொலிஸ் அத்தியட்சகர்களான தெவில் குருகே, ரஞ்சித் காந்துநரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் மற்றும் தர்மேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது வவுனியா - மன்னார் வீதி வேப்பங்குளத்தில் மாவீரர்நாள் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவம் - வவுனியா கோவில் குளத்தில் ஏற்றப்பட்ட தேசியக் கொடியைப் பலவந்தமாக இறக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, தற்போதுள்ள முறுகல் நிலையைத் தவிர்ப்பது மற்றும் இரு தரப்புக்கும் இடையான ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாகக் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

இந்தக் கூட்டறிக்கையில் வன்னி மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேலும் கைச்சாத்திட்டிருந்தார்.

மாவீரர்தின நிகழ்வுகளைத் தொடர்ந்து - இருதரப்புக்களும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடதத இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்புத் தொடர்பாக இரு தரப்பினர்களுக்கும் இடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என்றும், பொதுமக்களின் பாதுகாப்பை பலப்படுத்தும் முகமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறாதிருக்க நடவடிக்கை எடுப்பதெனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (03)

# பாதாள கோஷ்டியை கட்டுப்படுத்த பொலிஸ் பிரிவு விஸ்தரிப்பு

கொழும்பிலுள்ள பாதாளக் கோஷ்டிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, அவர்களை வலுவிழக்கச் செய்வதற்கான பொலிஸ் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகத்தின் விசேட குற்றச்செயல்கள் தடுப்புப் பிரிவின் தலைமையில் ஆரம்பமாகியுள்ள இந்த நடவடிக்கைகள் கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளையும் மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையில் இதுவரையில் சில பாதாளக் கோஷ்டிகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது கொழும்பில் இயங்கி வரும் பாதாளக் குழுக்களின் தலைவர்கள் உட்பட உறுப்பினர்களைச் சரணடையும்படி உத்தரவிட்டுள்ள பொலிஸார், சரணடையாத பட்சத்தில் இவர்களைக் கைதுசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (தே)

# உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் டிசம்பர் பத்தாம் திகதி வெளியாகும்!

இந்தவருடம் இடம்பெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்குவதற்கான வெட்டுப்புள்ளிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதிய மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவர் என, பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார். (தே)

# மன்னார் கடற்பரப்பில் 12 இந்திய மீனவர் கைது!

(மன்னார்)

மன்னார் பேசாலைக் கடலில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மூன்று வள்ளங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம், கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்றுமுன்தினம் தலைமன்னார் பொலிஸார் ஊடாக மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இந்த மீனவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, அதுவரை வள்ளங்களை கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

# மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்து...

கோப்பாய்





வடமராட்சி





சாட்டி





கொடிகாமம்





வவுனியா





# இணுவிலில் கோஷ்டி மோதல் ஆறு பேர் பொலிஸாரால் கைது!

(யாழ்ப்பாணம்)

இணுவில் - காரைக்கால் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர் இந்தப் பகுதிப் பொதுமக்களின் உதவியுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

அண்மையில் கனடாவிலிருந்து வந்த நபர் ஒருவர் தனது காணியில் சட்டவிரோதமாக ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, இந்தப் பகுதி பொதுமக்களுடன் முரண்பட்டார்.

இந்த முரண்பாடு- இந்தப் பகுதி இளைஞர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, ஆலயத்துக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதுடன், இளைஞர்கள் மீதும் தாக்குதல்களை நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக இந்தப் பகுதியில் மோதல சம்பவங்கள் இடம பெற்று வந்தன.

சிலர் வெட்டுக்காயங்களுக்கும் உள்ளாகியிருந்தனர். அடுத்து கனடாவிலிருந்து வந்த நபர் - நேற்று முன்தினம் 40 பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்று காரைக்கால் பகுதியில் உள்ள இளைஞர்கள் மீது தாக்கு தலை நடத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதல்களில் பொது மக்களுக்குச் சொந்தமான 6 வீடுகள் சேதமாக்கப்பட்டதுடன், சனசமூக நிலையமும் சேதமாக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செல்வம் தலைமையிலான குழுவினர் - மோதலில் ஈடுபட்ட இளைஞர்கள் ஆறு பேரைக் கைது செய்தனர். (சூ)

# தீவகத்தில் வெள்ளத் தேக்கத்தால் போக்குவரத்து தடைப்படும் அபாயம்

(தீவகம்)

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக, தீவத்தின் பல்வேறு வீதிகள் சேதமடைந்துள்ளன.

இங்குள்ள பல வீதிகள் கடந்த பல வருடங்களாகத் திருத்தப்பட்ாத நிலையில், தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக, ஓடும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் படுகிறது.

இந்த நிலையில் பல வீதிகளில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக வேலணையிலிருந்து ஊர்காவற்துறை செல்லும் பிரதான வீதி - வெள்ளத்தால் அரித்துச் செல்லப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வீதியிலுள்ள பல மதகுகளும் உடைந்து விழுந்துள்ளன. அத்துடன் இன்னும் சில தினங்களுக்கு இந்த நிலை ருமாயின் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

பங்களா வீதியூடாக ஊர்காவற்துறைக்குச் செல்லும் பிரதான வீதி கடற்படையால் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த வீதி வழியாகவே ஊர்காவற்துறைக்கு 780 இலக்கப் போக்குவரத்து சேவைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (99)





கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழீழ விளையாட்டுத்துறையினரின் சஞ்சிகை மற்றும் ஒலிப்பேழை வெளியீட்டு விழா நிகழ்வில் - சஞ்சிகையை யாழ். மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதியிடமிருந்து மாவீரர் வீரமணியின் தந்தை பெற்றுக்கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படம்: தீபன்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : கெ.மதுசங்கர்
முகவரி : கோண்டாவில்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : பா.சாந்தன்
முகவரி : கரவெட்டி.

ஆறாவது அகவையில்



பெயர் : கு.தர்சன்
முகவரி : சித்தன்கேணி.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------

முகவரி :------------------

பிறந்த ஆண்டு:------------------

கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஒரே நாளில் 40 நாய்கள் அழிப்பு

வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் ஒரே நாளில் மட்டும் 40 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

வளர்ப்பு நாய்களுக்கு கழுத்துப்பட்டி அணிந்து வளர்க்குமாறும், கட்டாக்காலி நாய்களைப் பிடித்து ஒப்படைப்பவர்களுக்கு ஒரு தொகை பணம் வழங்கப்படும் என பிரதேச செயலர் செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (72)

## வலது குறைந்தோர் தினம் டிசம்பர் 3 இல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலது குறைந்தோர் தினம் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

அன்றையதினம் மக்கள் மத்தியில் ஊனமுற்றோர் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச ரீதியாக - நிகழ்ச்சிகளை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, தென்மராட்சிப் பிரதேச சமூக சேவை அலுவலர் தெரிவித்தார். (25)

## தீவகத்தில் நுளம்புப் பெருக்கம்

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக தீவகத்தில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து வருகின்றது.

தீவகப் பிரதேசம் தாழ்நிலப் பிரதேசமாக காணப்படுவதால், மழை காலங்களில் இந்தப் பிரதேசங்களில், பரவலாக எங்கும் மழைநீர் தேங்குவது வழமை.

இவ்வாறு தேங்கும் மழைநீர் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக அமைவதுடன், பல்வேறு நோய்கள் தோன்றுவதற்கும் காரணமாகின்றன.

இதனால் இந்தப் பிரதேசத்தில் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பதாகவும், இந்த நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இந்த விடயத்தில் உரிய தரப்பினர் தலையிட்டு மருந்துகளை விசிறல் மூலம், நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (99)

## விவசாய சம்மேளன கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை விவசாய சம்மேளனச் சபையின் கூட்டம் - இன்று மாலை 4.30 மணிக்கு அரியாலை ஸ்ரீபாரதி வித்தியாலய மண்டபத்தில் தலைவர் எஸ்.ரீ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரவித்துள்ளனர். (55)

## அரியாலை கமநல அலுவலகம் திறப்பு விழா

வட-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட (நிகொட்) நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அரியாலை கமநல அபிவிருத்தி உப அலுவலகக் கட்டடத் திறப்பு விழா - டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொண்டு, கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் நிகொட் திட்டமிடல் பணிப்பாளர்கள், பணியாளர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் புவியற்துறை மண்டபத்தில் வாராந்தம் இடம்பெறும் திரைப்படக் காட்சித் தொடரில் - இன்று காலை 10.30 மணிக்கு 'அல்ஜியர்ஸ்சமர்' என்ற பிரெஞ்சுத் திரைப்படம் காண்பிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கான பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட தமிழ் பாடம் கற்றல், கற்பித்தவர்களுக்கான, பயிற்சி பெற்ற ஆசியர்களுக்கான பாராட்டு விழா யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வி வலய அமைப்புக் குழு தெரிவித்தது. (நி)

## புளியங்கூடலில் கடை உடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் சந்தியில் அமைந்துள்ள பலசரக்குக் கடையொன்று - கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருடர்களால் உடைக்கப்பட்டு, பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவதினமன்று இரவு கடையின் ஓடுகளைப் பிரித்து, உள்ளே இறங்கிய திருடர்கள் - அங்கு நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் உட்பட, இருபது ஆயிரம் ரூபா பெறும்தியுடைய பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளதாக, குறித்த கடையின் உரிமையாளர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த சில மாதங்களாக இந்தப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (99)

## இணுவிலில் சிறுவர் பூங்கா

(இணுவில்)

இணுவில் பொது நூலகத்தில்- சிறுவர்களுக்கான பொழுது போக்கு விளையாட்டுச் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனை கடந்த தீபாவளித் தினத்தன்று தமிழ்த் துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் திறந்து வைத்தார்.

தினமும் மாலை 3.30 மணிக்குப் பின் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இந்தப் பூங்காவில் விளையாடி மகிழலாமென, நூலக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஏராளமான சிறுவர்கள் மாலை வேளையில் இந்த பூங்காவில் விளையாடுவதைக் காணமுடிகிறது. (101)

## தரம் 1 கற்பிக்கும் ஆசிரியருக்கான செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்தில் 2005 ஆம் ஆண்டு தரம் 1இல் கலவி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதுமுக, அறிமுக செயலமர்வு நாளை நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு, வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (122)

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவன இளைஞர் பிரிவால் சேர். பொன் இராமநாதன் வீதியிலுள்ள திருநெல்வேலி சத்திய சாயி நிலையத்தில் இன்று முதல் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கு 12 மணியளவில் முடிவுறும்.

28 ஆம் திகதி கணிதமும், 29 ஆம் திகதி தமிழும், 30 ஆம் திகதி விஞ்ஞானமும், 1 ஆம் திகதி சமூகக்கல்வியும், 2 ஆம் திகதி ஆங்கில பாட கருத்தரங்கும் நடைபெறவுள்ளன.

## வடமராட்சி வலய அதிபர், ஆசிரியருக்கான செயலமர்வு

வடமராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான விசேட கல்வி அறிமுகப்படுத்தல் சம்பந்தமான செயலமர்வு - எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலுள்ள ஆசிரிய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிபர், ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (122)

## வடமராட்சியில் தேயிலை ரின்கள் கரையொதுங்குகின்றன

வடமராட்சி வடக்கு - கிழக்கு கடற்கரை ஓரங்களில், உயர் இன தேயிலை ரின்கள் கடந்த சில நாட்களாக கரையொதுங்குகின்றன.

குறிப்பாக குடத்தனை, கற்கோவளம், இம்பர்சிட்டி போன்ற பிரதேசங்களில் உள்ள மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இவற்றைக் கண்டெடுத்துள்ளனர்.

அந்தப் பகுதிகளில் உள்ள இராணுவத்தினரும் தேயிலை ரின்க ளைக் கண்டெடுத்தனர் என அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (20)

# விளையாட்டு அரங்கம்



## 'பூமராங்' திரும்பித் தாக்குமாம்



அலீம் டார்
பாஸ் சரியான போட்டி

"தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்" என்பார்கள். இந்தப் பழமொழிக்குத் தற்போது உதாரணமாகியுள்ளார் அவுஸ்ரேலிய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோன்.

1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அணியினர் அவுஸ்ரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அப்போது அங்கு நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் முரளிதரன் பந்தை வீசும்போது அந்தப் போட்டியில் நடுவராகக் கடமையாற்றிய அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த டரெல் ஹெயர், முரளிதரன் பந்தை எறிவதாகக் கூறித் தொடர்ந்து No Ball என அறிவித்தார். அதனால் முரளிதரன் மன உளைச்சலுக்கு உள்ளானதும், அர்ஜீன ரணதுங்க தலைமையிலான 11 அணிவீரர்களும் களத்தைவிட்டு வெளியேறியமையும், மறந்து போகக்கூடிய விடயங்கள் அல்ல. இப்போது என்னவென்றால் அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே பிறிஸ்பேனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஷேன் வோன் தவறாகப் பந்து வீசுவதாகப் பாகிஸ்தான் நடுவர் அலீம் டார் சர்ச்சையைக் கிளப்பியுள்ளார்.

நியூஸிலாந்தின் முதல் இனிங்ஸில் ஜேக்கப் ஓரமை ஆட்டமிழக்கச் செய்வதற்காக ஷேன் வோன் Leg திசையில் தொடர்ந்து பந்து வீசினார். அதனால் அவை தவறான முறையில் வீசப்பட்ட பந்துகள் என விளக்கமளித்து நடுவர் அலீம்டார் Wide Ball என அறிவித்தார்.



ஷேன் வோன் திரும்பிப்பார்

இது குறித்து ஷேன் வோன் கூறுகையில் - ஜேக்கப் ஓரத்தின் விக்கெட்டைக் கைப்பற்றுவதற்காக அதிக சுழற்சியுடன் Leg திசையில் பந்து வீசினேன். இதைப் போய் நடுவர் தவறான பந்து எனக் கூறி Wide Ball ஆக அறிவித்துவிட்டார். இந்த முடிவு மிகவும் ஏமாற்றமளிப்பதாகவுள்ளது என விசனம் தெரிவித்திருந்தார்.

அன்று முரளிதரனும் தன்னுடைய கைவளைவானது பிறப்பிலிருந்தே காணப்படுவதாகவும் தான் வேண்டுமென்று அவ்வாறு பந்தை வீசவில்லையெனவும் எவ்வளவோ கூறியும் நடுவர் டரெல் ஹெயர் அதைக் காதில் வாங்கவில்லை. அந்த முன்வினைப் பாவமோ என்னவோ ஷேன் வோனையும் ஒரு போட்டியில் நடுவர் சோதித்துக் காட்டியுள்ளார்.

இப்போதாவது அவுஸ்ரேலியர்களுக்கு முரளிதரன் பட்ட துன்பம் புரிந்திருக்கும்.

டெஸ்ட் போட்டிகளில் இவ்வாறு Leg திசையில் பந்து வீசி வீரர்களைச் சலிப்படையச் செய்த சந்தர்ப்பங்களில் டெண்டுல்கருக்கு ஏற்பட்ட அனுபவம் வித்தியாசமானது.

2001 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது சச்சின் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச் செய்வதற்காக, அன்றைய இங்கிலாந்து அணியின் கப்டனான நஸார் ஹுசேன் புதிய வியூகம் ஒன்றை அமைத்திருந்தார். அதாவது சுழற்பந்து வீச்சாளரான அஸ்லி கைல்ஸ் மூலம் டெண்டுல்கருக்குத் தொடர்ந்து Leg திசையில் பந்து வீசி, அவரைப் பொறுமை இழக்கச் செய்து விரைவில் ஆட்டமிழக்கச் செய்யலாம் என்று கருதினார்.

இதுபற்றிக் கருத்துக்கூறிய நஸார் ஹுசேன் - டெண்டுல்கரின் விக்கெட்டைக் கைப்பற்றுவதே எங்கள் நோக்கமேதவிர அவர் ஓட்டங்கள் குவிப்பதற்கு ஏற்றதுபோல் பந்து வீசுவது அல்ல என்று கூறியிருந்தார்.

இந்தப் போட்டியில் அஸ்லிகைல்ஸ் இவ்வாறு Leg திசையில் தொடர்ந்து பந்து வீசியபோதும் நடுவர் Wide Ball என்றோ அல்லது No Ball என்றோ அவரை அறிவிக்கவில்லை. இந்தப் பந்துவீச்சு முறைபற்றி அப்போது போட்டிநடுவரிடம் புகார் கூறப்பட்டிருந்தது. ஆனாலும் இதுகுறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவை ஒரு புறமிருக்க, பாகிஸ்தானின் நடுவரான அலீம் டார் மீது இப்போது ஒரு சந்தேகப் பார்வை விழுந்துள்ளது. ஏனென்றால் கடந்தமாதம் பாகிஸ்தானில் நடைபெற்ற பாக்ரெல் -கிண்ண இறுதிப் போட்டியிலும் சொகைப் மலிக்கின் பந்துவீச்சுக் குறித்தும் இவர் சந்தேகம் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

-விமலன்.

## தேடிப்பார்த்தால் தென்றலைக் காணோம்

அவுஸ்ரேலிய அணியின் முன்னணிப் பந்து வீச்சாளர்கள்.உட்பட உலகின் 99 சதவீதமான பந்து வீச்சாளர்கள் பந்தை எறிவதாக முரளிதரன் தெரிவித்ததாக வெளிவந்த செய்தி பலதரப்புக்களிலும் பலத்த எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

தான் இவ்வாறான கருத்தைத் தெரிவிக்கவில்லையென மறுத்துள்ள முரளிதரன் தன்னைக் குற்றஞ்சாட்டும் பந்து வீச்சாளர்கள் முதலில் தமது பந்து வீச்சுப் பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று தெரிவித்த கருத்தையே அவுஸ்ரேலிய ஊடகம் ஒன்று திரிபுபடுத்திக் கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முரளிதரன் இவ்வாறு தெரிவித்துள்ளாரா? இல்லையா என்பது பற்றிக் கருத்துத் தெரிவிப்பதோ அல்லது முரளிதரனின் கருத்தை நியாயப்படுத்துவதோ எமது நோக்கம் அல்ல.

முரளிதரன் தெரிவித்ததாக வெளிவந்த கருத்துத் தொடர்பாக அதிருப்தியைத் தெரிவித்து முரளிதரனிடம் விளக்கம் கோரியுள்ள இலங்கை கிரிக்கெட்சபை முரளிதரன் பந்தை எறிவதாக அவுஸ்ரேலிய நடுவர்கள் குற்றஞ்சாட்டியபோதும் தூஸ்ரா பந்து வீச்சுத் தவறானது என நடுவர்கள் தீர்ப்பளித்தபோதும் நடந்து கொண்டமுறை சரியானதா என்பது சர்ச்சைக்குரியதாகவே காணப்படுகின்றது.

முரளிதரன் பந்தை எறிவதாக நடுவர்கள் குற்றஞ்சாட்டியபோதும், தூஸ்ரா பந்து வீச்சுத் தவறானது என நடுவர்கள் தெரிவித்தபோதும்கூட ஐ.சி.சி முரளிதரனைப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கோரவில்லை. ஆனால் எதற்காக இலங்கை கிரிக்கெட்சபை முரளிதரனைப் பரிசோதனைக்காக அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பிவைத்தது என்கின்ற நியாயமான வினா எழுகின்றது.



முரளிதரன்
எத்தனை கணைகள்

ஈற்றில் முரளிதரனின் பந்துவீச்சுத் தவறானதல்ல என்ற முடிவை ஐ.சி.சி அறிவித்தபோது இலங்கை கிரிக்கெட் சபை தேவையின்றியே பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளது என எண்ணத் தோன்றுகின்றது. முரளியினது கருத்துத் தொடர்பாகத் தற்போது விளக்கம் கோரிய அளவுக்கு முரளிதரன் மீது குற்றஞ்சுமத்தப்பட்டபோது முரளிதரனுக்கு ஆதரவு வழங்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இதேசமயம் முரளிதரனது கருத்துத் தொடர்பாகத் தாம் அதிர்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவுஸ்ரேலிய வீரர் மத்தியூ ஹைடன், முரளிதரன் மீது அவுஸ்ரேலிய வீரர்கள் தேவையின்றிக் குற்றஞ்சுமத்திய போது அவர் உளரீதியாக எவ்வளவு பாதிக்கப்பட்டிருப்பார் என எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டார். முரளிதரனுக்கு ஆதரவாக எந்த அவுஸ்ரேலிய வீரர்களும் கருத்துத் தெரிவிக்கவில்லை. இப்போது பந்து தமது பக்கம் எறியப்பட்டபோது கொதித்து எழுந்துள்ளார்கள். தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்.

-லெஸ்லி.

## வெண்மை ஏன் வேகிறது?

காலம் மாறிக் கொண்டிருக்கிறது. உலகம் ஒரு கிராமமாக மாறிக் கொண்டிருக்கிறது. எல்லோரும் எல்லோரிலும் தங்கி வாழும் நிலை காணப்படுகிறது என்று கூறப்பட்டாலும் மனப்பாங்கு எனும் ஒரு விடயம் பற்றி எவராலும் எதுவும் சரியாகக் கூற முடியாமல்தான் இருக்கும் போலத் தெரிகிறது. இன்று ஒரு இனவாதச் செயற் பாடொன்று இரு நாட்களுக்கிடையில் ஒரு ராஜதந்திர நெருக்கடியைக்கூட உருவாக்கிவிட்டது என்று சொல்லக் கூடிய அளவிற்குச் சென்றுவிட்டது. இங்கிலாந்தைப் பொறுத்தவரை விளையாட்டுத்துறையில் பேதம் பார்ப்பதில்லை. திறமைக்கே முதலிடம் என்று நடந்து கொள்பவர்கள் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. எனவே இங்கிலாந்து தேசிய உதைபந்தாட்ட அணியில் கறுப்பின வீரர்கள் பங்கு கொள்வது என்பதும் ஆச்சரியமான தொன்றல்ல.

அண்மையில் உதைபந்தாட்டச் சுற்றுப்பயணம்... இங்கிலாந்து அணி ஸ்பானிய நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தது. ஸ்பானியாவின் சண்டியாகோ நகரில் [illegible]ர்னபா ஸ்ரேடியத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியைக் காண பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்தனர். இந்தப் போட்டியில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் தோல்வி கண்டதை இங்கிலாந்து எதுவித மறுப்பும் இன்றி ஏற்றுக் கொண்டது. ஆனால் ஆட்டத்தின் போது ஸ்பானிய ரசிகர்களின் அருவருக்கத்தக்க செயற்பாட்டைத் தான் இங்கிலாந்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இங்கிலாந்து அணிக்காக விளையாடிய கறுப்பின வீரர்களுக்கு எதிராக கறுப்பு நிறம் இழி வானது என்பது போல இனவாதக் கூச்சல் களைத் தொடர்ச்சியாகப் பல்லாயிரக் கணக்கானோர் எழுப்பியது தான் அந்த அருவருக்கத்தக்க செயற்பாடு.



ரொனி பிளேயர்
மனம் நிறைவாய் இருக்கு

இங்கிலாந்தின் விளையாட்டுத்துறை அமைச்சர் றிச்சட் கபோர்ன் உடனடியாகவே தனது கோபத்தையும், வெறுப்பையும் வெளிப்படுத்திய போதும் ஸ்பானிய விளையாட்டுத்துறை அதிகார சபை உடனடியாக தனது கருத்தைக் கூறவில்லை என்பது ஒரு அசிங்கமான செயற்பாடாகக் கருதப்படு கிறது. ஆனால் ஸ்பானிய பிரதமர் ஜோஸ் லூயிஸ் றொட்ரிகஸ் சப்படாரோவின் சார்பில் குரல் தரவல்ல அதிகாரிகள் இத்தகைய அவதூறுகள் கருத்தல் கொள்ளப்படத் தக்கவை யல்ல எனக் கூறியுள்ளனர்.

பிரித்தானிய பிரதமர் காரியால யத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் - பிரதமர் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளார். எந்தவகை யிலும் எப்போதும் விளையாட்டுத்துறையில் இனவாதம் புகுவதை அனுமதிக்கவே முடியாது என்று ஆணித்தரமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் இன்னொரு மனவேதனை என்னவென்றால் ஸ்பானியப் பத்திரிகைகளும் இந்த விடயம் பற்றி அடக்கியே வாசித்துள்ளமைதான். பொதுவாக மேற்குலகப் பத்திரிகைச் சுதந்திரம் வியக்கத்தக்கது. இருந்தும் ஐரோப்பிய நாடான ஸ்பானியப் பத்திரிகைகள் இதனை அடக்கி வாசித்தமை ஏமாற்றமே அளித்துள்ளது.



எங்கும் நிறைந்தவர்கள்

முன்னதாகவும் இத்தகையதொரு சம்பவம் நடைபெற்றிருந்தது. இங்கிலாந்தின் கழக உதைபந்தாட்ட கறுப்பு வீரர் ஒருவரை ஸ்பானிய உதைபந்தாட்டப் பயிற்றுனர் லூயில் அரசோன்ஸ், அவரது நிறத்தைச் சுட்டிக்காட்டி அவதூறாகப் பேசியுள்ளார். இந்த வார்த்தைப் பிரயோகம் பற்றி எழுந்த சர்ச்சை உருவாகிய போது எனது மனச்சாட்சி தெளிவா கவே இருக்கிறது என்று திமிராகவே பதிலளித்திருந்தார். இருந்தும் இந்தச் சம்பவத்தின் பின்னும் இங்கிலாந்து அணி ஸ்பானியாவுக்கு விஜயம் செய்ததென்றால் அது இன வாதத்தை நாங்கள் எப்போதுமே கணக்கில் எடுக்க மாட்டோம் என்பதைத் தெரிவிக்கத் தான், என்று இங்கிலாந்து தரப்பு கூறுகிறது. எது எவ்வாறாயினும் வெள்ளை உலகம் என்னதான் முன்னேறினாலும்த இதயத்தில் கரியைப் பூசிக் கொண்டிருப்பது இன்னமும் வெட்கம்தான்.

-லலி.

# பறக்க மாட்டாயா KIWI பறவையே



கில்கிறிஸ்ட் என்ன பிறப்பப்பா

அவுஸ்ரேலிய நியூசிலாந்து அணி களுக்கிடையில் பிறிஸ்பேனில் நடந்து முடிந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 156 ஓட்டங்களால் தோல்வி அடைந்தமையானது அவுஸ்ரேலிய அணியின் ஆதிக்கம் கிரிக்கெட் உலகில் தொடரத்தான் போகின்றது என்பதனையே எடுத்துக் காட்டுகின்றது.

முதலில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடி 355 ஓட்டங்களை எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் நியூசிலாந்து அணிசார்பில் ஜேக்கப் ஓரம் 126 சிங்கிளெயர் 69 ஓட்டங் களைப் பெற்றனர்.

பின்னர் தனது முதல் இனிங்ஸை விளையாடிய அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 585 ஓட்டங்களைக் குவித்தது. இதில் கில்கிறிஸ்ட், கிளார்க் ஜோடி அபார ஆட்டத்தை வெளிப் படுத்தி அவுஸ்ரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கப் பெரிதும் உதவியது.

இதிலும் கிளார்க் தான் கலந்து கொண்ட முதல் டெஸ்டிலும் (இந்தியா- இது அவுஸ்ரேலிய மண்ணுக்கு வெளியே) உள்நாட்டிலும் சதங்களை அடித்து 110 வருட சாதனையை சமன் செய்துள்ளார் / முறியடித்துள்ளார். இதன் மூலம் அவுஸ்ரேலிய அணியில் இடம்பிடிப்பதே போட்டியான நிலை யில் தனது திறமையை நிரூபித்ததன் மூலம் தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி வெறும் 76 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததுதான் பரிதாபமானதாகும்.

அவுஸ்ரேலிய மண்ணில் விளையாடிய நியூஸிலாந்து அணியின் குறைந்த ஓட்ட எண்ணிக்கையும் இதுதான். இதற்கு முதல் 1980- 1981 காலப்பகுதியில் பேர்த் டெஸ்டில் 121 ஓட்டங்களில் நியூசிலாந்து அணி சுருண் டதே அந்த அணியின் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

அத்துடன் அவுஸ்ரேலியாவின் வேகப் புயல்களான மக்ரா மற்றும் ஜிலெஸ்பி இருவரும் தமக்கு துடுப்பாடவும் தெரியும் என்று நிரூபித்ததும் இந்த டெஸ்டில்தான். இறுதி விக்கெட்டுக்காக அவர்கள் இருவரதும் இணைப்பாட்டம் 114 ஆக இருந்தது.

இதேவேளை நியூஸிலாந்துத் துடுப்பாட்ட வீரர்களில் சிங்கிளெயர் மற்றும் மக்கலம் இருவரது தவறான ஆட்டமிழப்பு முறை மூலம் மீண்டும் நடுவர்கள் தமது பக்கக் கடமையைச் சரிவர செய்யத்தவறி விட்டனரா என்ற வினா தவிர்க்கமுடியாதபடி எழுகின்றது.

என்னதான் இருந்தாலும் 35 வருடங்களாக இந்திய மண்ணில் சாதிக்காததை கில்கிறிஸ்ட் தலைமையிலான அவுஸ்ரேலிய அணி சாதித்துத் தமது தாயகம் திரும்பிய பின்னர், பொண்டிங் தனது வெற்றிப் பயணத்தைக் கச்சிதமாக நியூஸி லாந்துடன் ஆரம்பித்துள்ளார். இந்தவேளையில், அவுஸ்ரேலிய அணியுடன் தற்போது போட்டி போடும் அணிகள் இல்லையென்பதனை ஏற்பது நெருடலாகத்தான் இருந்தாலும் அதனை ஏற்க வேண்டிய நிலைதான் உள் ளது.



இந்த நிலையில் இரண்டாவது டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி, நியூஸிலாந்திடமிருந்து பெரும் சவாலைச் சந்திக்குமென நியூஸிலாந்து அணித்தலைவர் பிளெமிங் கூறியுள்ளார். இவரது இந்தக் கூற்று மெய்யாகுமா? அதற்கு அவுஸ்ரேலிய அணி தமது வெற்றியால்தான் பதில் சொல்வார்களா? சற்றுப் பொறுத்திருங்கள்.

– யசோ.

# இது முடிவல்ல, தொடக்கம்



ரெனிஸ் உலகின் இந்தவருட ஆடவர் வரிசைக் கதாநாயகன் என்றால் அது சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த றொஜர் பெடரர்தான் இந்தவருடம் முழுவதும் விளையாடிக் குறிப்பிடத்தக்க வெற்றிகள் பெற்றவர். வருட இறுதியையும் பெருமகிழ்ச்சியுடன் நிறைவு செய்கிறார்.

அமெரிக்க ரெக்ஸாஸ் மாநில உதாஸ்ரனில் நடைபெற்ற ATP மாஸ்ரர் கிண்ணத்தை றொஜர் பெடரர் தன்வசப்படுத்தியதன் மூலம் 2003 ஆம் ஆண்டு வென்ற கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொண்டமையும் குறிப்பிடவேண்டும். இந்தவருடம் இவருடைய காட்டில் நல்ல மழை. ATP போட்டியில் பெடரருக்கு இறுதிப் போட்டியில் சவாலாகவந்தவர். அவுஸ்ரேலியாவின் லெய்ரன் ஹெவிட். இவரை வெடார் 6 – 3, 6 – 2 என்ற கணக்கில் மிக இலகுவாகவே வெற்றிகண்டார். இதில் ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால் தொடர்ச்சியாகக் குடா நாட்டின் ஏதோ ஒரு கட்டத்தில் கடந்த இருவருடங்களில் இருபத்திரண்டு முறை தரக்கணிப்பில் பத்தாவதுக்குள் இருந்த அங்கீகரிக்கப்பட்ட வீரர்களை சந்தித்திருக்கிறார். இந்த இருபத்திரண்டிலும் பெடரரே வென்றுள்ளார். இருபத்திமூன்று வயதான பெடரர் இந்த முறை விம்பிள்டன், US ஓபன், அவுஸ்ரேலிய ஓபன் என்ற மூன்று பிரபல்யமான கிண்ணங்களை வென்றவர். மொத்தத்தில் றொஜர் பெடரர் இந்த வருடம் வென்ற கிண்ணங்கள் பதினொன்று.

ஹெவிட் தோற்றிருக்கலாம். ஆனால் உலகத் தரவரிசையில் மூன்றாம் இடத்தில் இருப்பவர். இவர் உயர்தகைமை கொண்டவரே. இவர் 2001, 2002 ஆம் ஆண்டில் MASTER கிண்ணம் வென்றவர். அவுஸ்ரேலிய ஓபன் நான்காம் சுற்றுவரை முன்னேறியவர். விம்பிள்டன் போட்டிகளில் அரை இறுதிப் போட்டிகள்வரை வந்தவர். US ஓபன் இறுதிப் போட்டிக்கு வந்தவர், எல்லா இடத்திலும் றொஜர் பெடரரால்தான் இவர் தோற்கடிக்கப்பட்டார். இவர்கள் இருவரின் மோதல்களை எடுத்துக் கொண்டால் 8 – 7 என்று நெருக்கமாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தவகையில் 2005 ஆம் ஆண்டு இந்த இரு பெரும் வீரர்களின் ரெனிஸ் போட்டிகள் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தவே செய்யும். கூடவே அவர்களுக்கு கோடி கோடியாகப் பணம் குவியும்.

-சந்திரன்.

# இந்த ராத்திரிகள் விடியுமா?

சில வாரங்களுக்கு முன் ஒரு சர்ச்சை ஏற்பட்டது. 2005 உலக சம்பியன் ஷிப் போட்டிகள் நிறைவுற்ற இரண்டு நாட்களில் ஆரம்பமாவதற்குத் திட்டமிட்டிருந்த தென் ஆசியப் போட்டிகள் தொடர்பானதே அது. அதாவது இப்படி ஒரு இக்கட்டான நாட்களைக் கொண்ட அட்டவணையில் தென் ஆசியாவின் முதற்தர வீரர்கள் உலக சம்பியன் ஷிப் போட்டிகளை நிறைவு செய்துகொண்டு இலங்கையில் நடைபெறவுள்ள தென் ஆசியாப் போட்டிகளில் கலந்து கொள்ளும் சாத்தியம் இல்லாமற் போகும். இந்த நிலையில் இரண்டாம் நிலை தென் ஆசிய வீரர்களே இலங்கை வரவேண்டி ஏற்படும். இது மாபெரும் தடகளப் போட்டியை சுவாரஸ்யமற்ற தாக்கிவிடும் என்று பலத்த சர்ச்சை கிளம்பியது. அது ஒரு மாதிரியாக தற்போது ஓய்ந்து 2005 ஆகஸ்ட் 20–27 வரை தென் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை உத்தேசித்துள்ளது.



முட்டிமோத விடுவார்களா?

இது ஒருபுறம் இருக்க தென் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்த இருக்கும் ஒழுங்கமைப்புக் குழுவுக்கும், உலகளாவிய எரிபொருள் விலை ஏற்றமும் அந்நிய நிதி உதவிகளின் தாமதமும் உருவாக்கியுள்ள பொருளாதாரச் சிக்கல்கள் சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளது போலத் தெரிகிறது.

இந்த விடயத்தில் குரல் தரவல்ல அதிகாரி ஒருவர் கருத்துக் கூறுகையில் 300 மில்லியன் ரூபாவுக்கு கபினட், அனுமதி அளித்துவிட்டன. ஆரம்பத்தில் 500 மில்லியன் ரூபாய்கள் மொத்தமாக ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தத் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது அது சில வேளைகளில் 600 மில்லியன் ரூபாவைத் தாண்டியதும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை என்கிறார் அவர். ஆகவே நாங்கள் இன்னும் நிறையப் பணம் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதேவேளை மேலதிகமாகத் தேவைப்படும் 200 மில்லியன் ரூபாவைத் தேடும் வழிவகைகளைக் கண்டறிய குழுவுக்கு இன்னமும் தலைவர் ஒருவர் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பதவிக்கு விதந்துரைக்கப்பட்ட இரண்டு பேரும் இப்பதவியை இவ்வளவு பணம் சேர்க்க இயலுமா என்றதொரு அச்சத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது. பொதுவாகவே தென் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கும் வெற்றி பெறுவதற்கும் அவசியமான முதற் தேவை காணி நிதியாகத் தான் இருக்கப்போகிறது.

குறிப்பாக விளையாட்டு வீரருக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மைதானங்களைத் தயார் செய்தல் போன்றவற்றுடன் குறிப்பாக ஆரம்ப நிகழ்வு மற்றும் இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்கு மிகப் பெரும் தொகைப் பணம் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னமும் ஒருவருட காலத்துக்கும் குறைவாகவே உள்ள நிலையில் இவற்றையெல்லாம் நிறைவேற்ற முடியுமா, அதற்கான நிதி மூலங்கள் எவ்வாறு பெறப்படும் என்பது பெரியதொரு வினாவாக எழுந்து நிற்கிறது.

இதேவேளை கொழும்பு நகரத்தைக் கவர்ச்சிகரமான நகரமாக மாற்றுவதும் முக்கியமான தேவை. கொழும்பு மேயர் விளையாட்டுக்குழுவின் ஒரு அங்கத்தவராக இருக்கும் நிலையில் அவர் மீதும் பாரியதொரு பொறுப்பு சுமத்தப்படுகிறது. தற்போது பொதுவாக இந்த தென் ஆசிய விளையாட்டு விழா தொடர்பான பல்வேறு செயற்பாடுகளின் செயற்திறன் மதிப்பீட்டுக் குழுவொன்றும் அமைக்கப் படவுள்ளது. இப்படியாகப் பல்வேறு பிரச்சினைகள் எதிர் நோக்கப்படும் வேளையில் மொத்தம் பத்தொன்பது நிகழ்வுகள் கொண்ட தென் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை தடைகளப் போட்டிகள் மற்றும் நீச்சல் போட்டிகளுக்கான தேசிய அணிகள் மட்டுமே தற்போது ஆயத்த நிலையில் உள்ளன.

பங்கு கொள்ளப்போகும் ஏனைய விளையாட்டுக்களுக்கான அணித் தெரிவுகள் இன்னும் பூர்த்தியாகாத நிலையில் உள்ளன என்றும் அறியவருகிறது. இதெல்லாவற்றையும் பார்க்கும் போது அகலக்கால் வைத்து விட்டோமே என்று உணர்வுள்ள பொறுப்புள்ள சிலர் அங்கலாய்ப்பதும் தெரிகிறது. தற்போது பாரம்பரியமான ஏழு தென் ஆசிய நாடுகளுடன் ஆப்கானிஸ்தானும் சேர்க்கப்பட்டு எட்டு நாடுகள் பங்கு கொள்ளும் விளையாட்டு விழாவாக இது அமையப் போகிறது. 2005 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள போட்டிகள் பத்தாவது தென் ஆசியப் போட்டிகளாகும். போட்டிகள் எப்படியும் நடைபெற்று முடிவடையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் எல்லோரும் பாராட்டும் வண்ணம் நடைபெற்று முடிவடைய வேண்டும். எல்லோராலும் எதிர்பார்க்கப்படுவதும் அதுவே.

– மரியா.



பதக்க ஆசை நிறைவேறுமா?

## விளையாட்டு அரங்கம்

# தேசியத் தலைவர் எடுக்கும் தனித்துவமான முடிவில்தான் தமிழினம் சர்வதேச ரீதியில் தலை நிமிர்ந்து நிற்கின்றது

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் எடுக்கும் தனித்துவமான முடிவுகளால் தான் எமது இனம் இன்று சர்வதேச ரீதியில் தலைநிமிர்ந்து நிற்கிறது என, தமிழீழ அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரி வித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்ட பத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 'வரலாறு தந்த வல் லமை' பாடல் ஒலிப்பேழை வெளி யீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது -

ஒவ்வொரு காலகட்டங்களிலும் தமிழீழத் தேசியத் தலைவரால் ஏற் படுகின்ற நெருக்குதல்களுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து, அவற்றை உடைத்தெறிந்து வெற்றிப் பாதையிலே இட்டு, எமது மக்களை யும், எமது விடுதலை அமைப்பையும் கொண்டு செனறிருக்கின்றார்.

எந்த வேளையிலும் அவருக்கு ஏற்படுகின்ற நெருக்கடிகளுக்கும், சவால்களுக்கும் எமது இனத்தினு டைய வரலாற்றுக்குத் திருப்பமாக இருநதிருக்கிறது.

இன்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எமது தலை வர் முடிவெடுக்கின்ற பொழுது அது இராணுவ முடிவுகளாக இருக்கலாம். ஒவ்வொன்றும் எமது மக்களுடைய எதிர்காலம் கருதியதாகவே இருக் கிறது. அவருடைய அந்த முடிவு தான் இன்று எம்மைத் தலைநிமிர வைத்திருக்கிறது.

எமது தலைவர் உணர்விலே, அவரது செயற்பாட்டிலே எமது தலைவரின் வரலாற்றின் பிறப்பாக விடுதலை பெறத்துடிக்கும் இனத் துக்கும், வரலாறு ஒரு தலைவரைக் கொடுத்திருக்கிறது.

அதேபோல, இநத ஒலிப்பேழைக் குச் சிறந்த தலைப்பிட்டிருக்கின் றார்கள். அதாவது வரலாறு தந்த வல்லமை - உண்மையிலேயே வர லாறு வல்லமையைத் தரும்.

அந்த வல்லமையை நாங்கள் பற்றிப் பிடிப்போமானால், நிச்சயம் அந்த இனம் இந்தப் பூமிப்பந்திலே வாழக்கூடிய ஒரு சூழல் உருவாகி யிருக்கும். உருவாகி இருக்கின்ற வரலாறாகத்தான் நாங்கள் பார்க்கி றோம்.

இந்த வல்லமையை, வரலாற்றை பற்றிப் பிடிக்காத இனங்கள் பூமிப் பந்திலே இல்லாது ஒழிந்து போயுள் ளன.

ஆகவே, தலைவருடைய காலத் திலே இந்த வல்லமையைப் பெற் றுள்ளோம். அந்த வல்லமையை எப் படிப் பெற்றோம் என்று சொன்னால்- அவருடைய உணர்விலே, செயற் பாட்டிலே, பதினாறு வயதிலே இந் தப் போராட்டத்தின் தலைமையைத் தாங்குகின்ற சக்தியாக எங்களு டைய தலைவர் புறப்பட்டார். அதற் குப் பின்னால் ஒட்டுமொத்தமாக எமது தமிழினமும் அணிதிரண்டுள்ள துடன், வல்லமை கொடுத்தது.

இந்த வல்லமையின் விளைவு தான், இன்று எங்களுடைய பெருமை என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைவாணர் கண்ணனின் இசை அமைப்பில் உருவான - 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை வெளி யீட்டு விழா நிகழ்வு - போராளி புரட்சிகா தலைமையில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத் தார். தமிழீழத் தேசியக் கொடியை போர்பயிற்சிக் கல்லூரிப் பொறுப் பாளர் அஜந்தி ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து வெளியீட்டுரையை கப்டன் வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்த தமிழ வள் நிகழ்த்தினார்.

ஒலிப்பேழையின் முதற் பிர தியை, மாலதி படையணியின் தள பதி லெப்டினன்ட் கேணல் தமிழ்ச் செல்வி வெளியிட்டு வைக்க, மாவீ ரர் மேஜர் சஞ்சிகாவின் தாயார் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை மாலதி படையணியின் சிறப்புத் தள பதி கேணல் விதுஷா வழங்கினார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பா ளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தி னார். தொடர்ந்து கலைஞர்களுக் கான சிறப்புப் பரிசில்களை தளபதி கேணல் விதுஷா வழங்கிக் கௌர வித்தார்.

# போர்ப்பறை வெளியீட்டகத்தால் இரண்டு நூல்கள் வெளியீடு!

(கிளிநொச்சி)

போர்ப்பறை வெளியீட்டகத்தினால் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்க ளின் முதலாவது வெளியீடு - கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 'தம்பியவன்', 'ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக் கைகள்' என்னும் இரண்டு நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியி டப்பட்டன.

இந்த நூல்களில் தம்பியவன் நூலை போராளி சந்திரமதியும், ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவ டிக்கை நூலை போராளி மார்ச லாலும் தமிழாக்கம் செய்யப்பட்டன.

இந்தத் தமிழாக்கத்தில் தம்பிய வன் நூலை - போராளி சந்திரமதி வெளியிட்டுவைக்க, படைத்துறை யைச் சேர்ந்த தினேஷ் மாஸ்டர் பெற்றுக்கொண்டார்.

ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவ டிக்கை நூலை - போராளி கதிர வன் வெளியிட்டு வைக்க, கேணல் விதுஷா பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் பெருமளவான போராளிகள் கலந்துகொண்டனர்.








கடந்த திங்கட்கிழமை வட்டக்கச்சி பிரதேசத்தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் மங்கள வாத்தியத்துடன் மாவீரர் பெற்றோர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் மலர்மாலை அணிந்து கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# வவுனியா இராணுவத்தால் ஆபாசப்படங்கள் விநியோகம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் - பாட சாலை மாணவர்களுக்கு ஆபாசப் பட சிடிக்களை இராணுவத்தினர் கட்டாயப்படுத்தி திணித்துக் கொடுத்து வருவதாக விடுதலைப் புலிகளின் திரைப்பட வெளியீட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சமுதாயம் அழியவேண்டும் என்றும், எமது மக்களை அழிக்க வேண்டும் என்ற திட்டத்தோடு, ஆபா சப் படங்களை ஒவ்வொரு பாட சாலை மாணவர்களுக்கும் கொடுத்து வருகின்றனர்.

இதனைத் திரைப்பட வெளியீட் டுப் பிரிவினர் ஆராய்ந்து, கண்டு பிடித்து விசாரணைக்கு உட்படுத் தியபோது, பல மாணவர்களிடம் இந்தப் படச்சிடிக்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

இந்த ஆபாசப்பட சிடிக்களை வைத்திருக்கும் விடியோ நிலையங் கள், திரையரங்குகள் இவற்றைத் திரைப்பட வெளியீட்டுப்பிரிவிடம் ஒப்படைக்குமாறு கேடகப்பட்டுள் ளது.

# சைவநெறிப் போட்டியில் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே கிளிநொச்சி திருநெறிக் கழகத்தால் நடாத்தப் பட்ட சைவநெறிப் போட்டிப் பரீட்சை யில், சிறப்புப் பரிசு மற்றும் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான் றிதழ்களும், பரிசில்களும் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வு - கடந்த ஞாயிற் றுக்கிமை மாலை 2.30 மணியளவில் திருநெறிக்கழகத் தலைவர் வே.மகா லிங்கம் தலைமையில் கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் கருத்துரை களை மகாதேவ ஆச்சிரம நவத்திரு பிரகாஸ் மயானந்தா சுவாமிஜீ, திரு நெறிக்கழக உறுப்பினர்கள் ஆகி யோர் நிகழ்த்தினர்.

மாணவர்களுக்கான பரிசில் களும் வழங்கிக் கௌரவிக்கப்பட் டன.

இந்தப்போட்டியில் பரீட்சையில் 97 புள்ளிகள் பெற்று, மாவட்டரீதி யில் முதலாம் இடத்தைப் பெற்ற இராமநாதபுரம் மகாவித்தியாலய 11 ஆம் ஆண்டு மாணவி க.தேனுகா வுக்கு - பாரதி வித்தியாலய அதிபர் கனகரத்தினம் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தார்.

பரீட்சையில் சித்தியெத்திய மாண வர்கள் அனைவருக்கும் சிறப்பு விருந் தினர்கள் பரிசில்களையும், சான்றி தழ்களையும் வழங்கிக் கௌரவித் தனர்.

இந்த நிகழ்வில் - 2004 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்திலி ருந்து விஞ்ஞானபீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள முதலாமிட மாண வன் இராசு இளங்கோ (கிளிநொச்சி மத்திய கல்லூரி), கலைப்பிரிவில் முதலாவது நிலையில் தெரிவான மாணவி சி.அருணா (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்) ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக் கப்பட்டன. (09)

# சத்திர சிகிச்சைக்கு முன்பதிவு செய்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசத்தில் நிகொட் அனுசரணையின்கீழ், கண்ணில் புரைவளர்தலுக்கான (கற்றாக்) சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வுள்ளது.

சத்திர சிகிச்சை செய்யவேண் டிய நோயாளிகளை இனங்காண் பதற்கான பரிசோதனையும், முன்பதி வும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள் ளது.

இந்த நோய் இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பவர்களும், இதற்கு முதல் சத்திர சிகிச்சை செய்யப்பட் டவர்களும் - அன்றையதினம் தங் கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி அறிவித்துள் ளார்.

# க.பொ.த உயர்தர புவியியல் பாடத்தில் தோற்றும் மாணவருக்கான செயலமர்வு

அடுத்தவருடம் க.பொ.த உயர் தர பரீட்சையில் புவியியல் பாடத் துக்குத் தோற்றவுள்ள மாணவர்க ளுக்கான செயலமர்வு - கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நாளையும், நாளைமறுதினமும் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் - கிளி நொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு மற்றும் மருதங்கேணிக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களை யும், புவியியல்பாடம் கற்பிக்கும் ஆசி ரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள் ளார். (122)

# உரிமைகள் எமக்கு கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது

## வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் ஜெயம்

(மன்னார்)

எமது உரிமைகள் எமக்குக் கிடைக்கவேண்டும் என்ற அடிப் படையில்தான், இந்த விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது என, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் தெரிவித்தார்.

சிங்கள இனவாத அரசு - தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கா மல், எமது மக்களின் உரிமைக ளைச் சிங்களவருக்கு வழங்கிய தால், எமது தமிழ்ச் சந்ததியினர் வீறு கொண்டெழுந்து, போராடிக் கொண் டிருக்கின்றனர்.

எமது உரிமைகள் எமக்குக் கிடைக்கவேண்டும் என்ற அடிப் படையில்தான் இந்த விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, மாவீரர்களின் அளப்பரிய தியாகங் களால் உலகளவில் ஏற்றுக் கொள் ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் - இலுப்பைக்கடவை அரசினர் தமிழ்க்கலவன் பாடசா லையில், மாவீரர்களின் பெற்றோர் கள் கௌரவிப்பு நிகழ்வு - கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை போராளி பாலன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை மன் னார், கிளிநொச்சி மாவட்டங்களில் கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழன் ஏற்றி வைத் தார்.

மாவீரர் திருவுருவப் படத்துக் கான சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை யும் அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மாவீரர்களின் பெற் றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் ஜெயம், தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த ஈழவழுதி ஆகியோர் நிகழ்த்தினர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## அரசின் கையில் பந்து

தமிழ் மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரை தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்பாட்டின் மூலம் நடைமுறைக்கு வந்த போர்நிறுத்தம் கடந்த 33 மாதங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான நேரடிப்பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டு ஒரு வருடத்துக்கும் மேலாகிவிட்டது. சமாதானப் பேச்சு வார்த்தையில் சம பங்காளி என்ற நிலையில் இருந்து விடுதலைப்புலிகளை ஓதுக்கித்தள்ள எடுக்கப்பட்ட முயற்சியால்தான் முதலில் பேச்சுக்கள் தடைப்பட்டன.

அதன் பின்னர் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் பேச்சுக்களை முன்னெடுக்கத் தொடர்ந்து தயக்கம் காட்டி வருவதால் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் இழுபறி நிலைக்குள்ளாகியிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைபை அரசாங்கத்திடம் கையளித்து , ஒரு வருடத்துக்கும் மேலாகிவிட்ட போதும் - அதை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்த அரசாங்கம் பின்னிற்பதானது - சிங்கள ஆட்சியாளர்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகவே அமைந்திருக்கிறது.

தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரையில் சிங்களத் தலைமை மீதான அவநம்பிக்கை மிகமிக ஆழமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

காலம் காலமாக தமிழ் இனத்தை சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றி வந்திருக்கும் நிலையில், இனிமேலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்படத்தக்கதொரு நிலையில் இல்லை என்பதை இந்த மாவீரர்நாள் உரையில் தெட்டத் தெளிவாகவே எடுத்துரைத்திருக்கின்றார்.

இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் அர சாங்கம் உடனடியாகப் பேச்சுக்கு வரவேண்டும் என்றும் - தென்னிலங்கை அரசியல் சக்திகள் தமிழர் இனப்பிரச்சினை தொடர்பாகக் கொண்டிருக்கும் கொள்கையை வெளிப்படுத்த முன்வரவேண்டும் என்றும்-

சிங்கள அரசியற்தரப்புக்குச் சொல்லப்பட்டிருக்கிற செய்திகளாகும்.

உடனடியாகப் பேச்சுக்களைத் தொடங்க முன்வராவிடின் அடுத்த கட்டமாக என்ன என்ற எதிர்பார்ப்புக்கும் தலைவர் பிரகாரனின் இந்த மாவீரர்நாள் உரையிலேயே விடை கொடுக்கப்பட்டிருக்கிறது.

எமது அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, பொதுமக்களின் துயரவாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால் நாம் எமது தேசத்துக்காகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத்தவிர வேறுவழியில்லை என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டிய கட்டத்துக்குள் அரசாங்கம்தான் தமிழர் தரப்பைத் தள்ளிக் கொண்டிருக்கிறது என்ற யதார்த்தம் இதன் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்மக்களின் இந்தக் கொள்கைப் பிரகடனத்தை அரசாங்கம் எந்தவகையில் நோக்கப்போகிறதென்பதில் தான் இலங்கைத்தீவின் அரசியல் எதிர்காலமே தங்கியிருயிருக்கிறதென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

விடுதலைப் புலிகளை அரசியல், இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தி தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கிவிடலாம் என்ற எதிர்பார்ப்பு இனிமேலும் சிங்கள அரச தரப்புக்கு இருக்கக்கூடாதென்பதை இந்த மாவீரர் நாள் உரை மூலமாகப் பிரபாகரன் எச்சரித்திருக்கிறார்.

ஒட்டுமொத்த தமிழ்மக்களினதும் எதிர்பார்ப்பு சமாதானம் மூலமான தீர்வாக இருந்தாலும் - அதற்குச் சிங்கள ஆட்சியாளர்கள், அவர்களின் துணையாளர்களும் குறுக்கே நிற் கும் வரை சமாதானத்தீர்வு ஏற்படுவது சாத்தியமாகப் போவ தில்லை.

இப்படிப்பட்டதொரு சூழலில் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் யுத்தமா? சமாதானமா என்று தீர்மானிப்பதற்கான காலக்கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது அரசாங்கம் தான் எந்தப் பாதையால் செல்லப்போகிறது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

## நாடும் நடப்பும்



# 50 ஆவது அகவை காணும் தலைவருக்கு தளபதிகள், பொறுப்பாளர்களின் வாழ்த்து!

தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரனின் 50 ஆவது அகவை பூர்த்தியை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் பல்வேறு தளபதிகள், பொறுப்பாளர்கள், ஆகியோர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.



இந்தவகையில் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் தனது வாழ்த்துச் செய்தியில்-

தமிழ்மக்கள் கடந்தகால அரசியல் தலைவர்களால் ஏமாற்றப்பட்டனர். ஆனால் தேசியத் தலைவர் இந்த வரலாற்றை மாற்றியுள்ளார். எமது போராட்டம் சர்வதேச அளவிற்குப் பரிணாமம் பெற்றதும் எமது தலைவர் காலத்தில்தான். தமிழர்கள் அடிமைப்பட்டு இருக்கின்றார்க ளென்ற நிலைமாறி அவர்களது சுதந்திரம் கிட்டிய தூரத்திலுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

---



கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தனது செய்தியில் -

தூரநோக்குக்கொண்ட, தீர்க்கதரிசனம்மிக்க எமது தலைவரைப் பெற்றமை தமிழர்களின் அதிஷ்டமாகும். தமிழர்களின் பாரம்பரிய நிலமானது மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டதாகும். எமது போராட்டத்தில் கடல்வளத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் தூரதிருஷ்டியுடன் முன்னோக்கி சிந்தித்த தாலேயே விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் அது குறிப்பிடத் தக்களவு சக்தியீாக வளர்ச்சி பெற்றது எனக் குறிப்பிட்டார்.

---



மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா தனது செய்தியில் -

கடந்த 16 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் கெரில்லா அமைப்பாக இருந்ததை எவ்வாறு தலைவர் கட்டி வளர்த்தாரென விபரித்த அவர், தற்போது அரச படைகளுக்கெதிராக எமது படையமைப்பு மரபுவழிப் படையாக வளர்ச்சியடைந்த பின்னரும், 16 வருடங்களுக்கு முன்னர் எவ்வாறு எம்மைக் கண்காணித்தாரோ அதுபோலவே இன்றும் எம்மை அவர் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றார் எனத் தெரிவித்தார்.

---



அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தனது செய்தியில்-

தமிழ் மக்களது வாழ்வில் புதியதொரு சகாப்தம் ஆரம்பமாகியுள்ளது. எனத் தெரிவித்துள்ளார்.

அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர் மணிவண்ணன், அனைத் துலக விடுதலைப் புலிகளின் செயல கங்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் சார்பாக தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

---

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் தனது செய்தியில் -



சாதாரண மனிதவாழ்விற்கு அப்பாற்பட்டவர் தலைவர் வே.பிரபாகரன். இவர் தமிழ் மக்களுக்கு இயற்கையளித்த ஒரு அருங்கொடை. இவருடைய அரசியல், இராணுவ நுட் பங்கள் எல்லாம் தத்துவார்த்தமான முறையில் ஆழமாகப் பார்க்கப்பட வேண்டும்.

காலத்துடன் இணைந்ததாகவே இவரது தனித்துவம் உள்ளது. அரசியல் நிலைமைகளை அமைப்பு ரீதியாகவும், சர்வதேச ரீதி யாகவும், கணிப்பிடவும், எதிர்வு கூறக்கூடிய ஆற்றல் மிக்கவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தனது செய்தியில் -



தலைவர் தனது வியூகங்களால் தமிழ்மக்களை ஒரு கொடியின்கீழ் ஒன்றிணைக்கும் ஆற்றல் மிகுந்தவர். தேசியத் தலைவர் தனித்து தமிழ் மக்களிலேயே தங்கி நிற்பதனால் எந்தவொரு சவாலையும் அவர் எதிர்கொண்டு முறியடிப்பதில் வல்லமை பெற்றவர்: எனக் குறிப்பிட்டார்.

வடமுனை போர்முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், கேணல் ஆதவன் மற்றும் அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளை கரடியனாறில் திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பிரதேசக் கிளை மட்டக்களப்பு கரடியனாற்றில் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு திறந்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில் மாவீரர் ரோகிணி, மாவீரர் நூதவன் ஆகியோரின் தந்தையான அப்பாத்துரை, இலுப்படி சேனை மாரியம்மன் கோயில் குருக்கள் பாலச்சந்திரன், கிரான் கமநலச்சேவைத் தலைவர், நா.தாமோதரம் பிள்ளை ஆகியோரால் மங்கள விளக்குகள் ஏற்றிவைக்கப்பட்டன.

கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ப.சுஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை தமிமீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சு.மதன்ராஜ் ஏற்றிவைத்தார். வங்கியின் பெயர்ப்பலகையை மட்டக்களப்பு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் சே.நாவேந்திரன் திரைநீக்கம் செய்து வைத்தார். வங்கியின் கட்டடத்தை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தளபதி ராம் திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார்.

கருத்துரையை கிரான் பெரும்பாக உத்தியோகத்தர் சத்தியமூர்த்தி, பிரதேச செயலாளர் கந்தசாமி ஆகியோர் ஆற்றினார். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தளபதி ராம் முதலாவதாக சேமிப்புப் புத்தகத்தை வழங்கி வங்கி நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் வங்கியின் ஒரு பயனாளிக்கு இரு சக்கர உழவியந்திரமும், மூன்று பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வீதம் விவசாயக் கடனும், ஒரு பயனாளிக்கு சுயதொழில் கடனும் வழங்கப்பட்டன.

# துளிகள் நூல் வெளியீட்டு விழா

பல்துறைசார் ஆக்கங்களின் தொகுப்பான மா. மகாநேசனின் 'துளிகள்' நூல் வெளியீட்டு விழா இன்று பிப. 2 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் க.கனகேஸ்வரன் தலைமையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, யாழ்.போதனா வைத்தியசாலை டொக்டர் வி.கவிதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதற் பிரதியை மா. சிவநேசன் பெற்றுக் கொள்ளவுள்ளார். ஆய்வுரையை சிலிங்கோ காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தரும் அரசறிவியல் ஆசிரியருமான கு. றஜீவன் நிகழ்த்துவார்.

(116)

# எமது தாயக வீரர்கள் சர்வதேச ரீதியில் மிளிரவேண்டும் என்பதே தலைவரின் ஆசை!

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா



எமது தேசியத் தலைவர் இன்று 50 ஆவது அகவையில் கால் பதிக்கும் இந்த நாளில், மலர் வெளியிடுவதில் தமிழீழ விளையாட்டுத்துறையினராகிய நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இன்றைய போரியல் வரலாற்றினை எடுத்துக் கொண்டால் எமது தேசியத்தலைவரின் பாதங்கள் பதிக்காத இடமே தமிழீழத்தில் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அவரின் ஒவ்வொரு காலகட்ட வரலாற்றுப்பாதையினூடாக தமிழீழத்தின் ஒவ்வொரு பகுதிகளும் தொடர்புடையதாகவே இருக்கின்றது.

இன்று எமது இனம் போராடிக் கொண்டிருக்கின்றது. அது மக்களுடைய போராட்டம். எமது மக்கள்தான் ஒவ்வொரு போராளிக்கும் பாதுகாவலர் என்றே எமது தேசியத் தலைவர் கூறிக்கொண்டிருக்கிறார் என விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 50 ஆவது பிறந்ததின நிகழ்வையொட்டி கைலாசபதி கலையரங்கில் தமிழீழ விளையாட்டுத் துறையினரால் வெளியிடப்பட்ட சஞ்சிகை மற்றும் ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

கடந்தகால போராட்ட வரலாற்றினை எடுத்துக் கொண்டால், யாழ். குடாநாட்டில் வாழ்கின்ற மக்களை விடுதலைப்புலிகளிடம் இருந்து தனிமைப்படுத்த வேண்டும் என்பதனையே அரசு விரும்பியது. அதே மக்களாலேயே எமது போராட்டம் ஆதரிக்கப்பட்டது என்றால் எமது மக்கள் ஒருபோதும் எமது தலைவன் இருக்கும்வரை போராட்டம் தோற்றுவிடமாட்டாது என்பதனை உணர்ந்தவர்கள், அதனால் ஆதரித்தார்கள். இது எமது தலைவர்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை என்றுதான் சொல்லவேண்டும்.

எமது தலைவரிடத்தில் நாங்கள் எதைப்பற்றியும் முறைப்பாடு செய்யலாம். ஆனால் மக்களைப்பற்றி குறைகூறமுடியாது. அதனை எமது தலைவர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார். அவ்வளவுதூரம் அவர் மக்களிடம் ஆழ்ந்த அன்பும், நம்பிக்கையும் கொண்டுள்ளார். இன்றைய போராட்டப் பாதையில் எமது பலம் மக்களே என்றுதான் தலைவர் என்றும் கூறிக்கொள்வார்.

இன்றையகால கட்டத்தில் எமது மக்கள் தெளிவாக இருக்கவேண்டும். இன்று எதிரி எமது போராட்டத்தையும் மக்களையும் நலிவடையச் செய்யவேண்டுமென நம்பிக்கை கொண்டிருக்கின்றான். அதை எமது மக்கள்தான் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். எமது தலைவர் இருக்கும் வரையில், போராளிகள் இருப்பார்கள். போராளிகள் இருக்கும்வரை போராட்டமும் இருக்கும், மக்களும் இருப்பார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இன்று எமது தலைவரின் ஆற்றலை எம்மாலேயே அளவிடமுடியாதபோது, எதிரியினால் எப்படி முடியும். எமது தலைவன் அத்தகைய ஆற்றலைக் கொண்டுள்ளார் என்பதனை அறிந்து கொள்ளவேண்டும்.

எமது தேசியத் தலைவரின் நீண்டகால விருப்பம் எமது விளையாட்டு வீரர்கள் சர்வதேச ரீதியில் புகழ்பெறவேண்டும். அந்த முயற்சியின் பயனாகவே நாம் 2002 ஆம் ஆண்டு தமிழீழ விளையாட்டுத்துறை என்ற ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றோம். ஆரம்பிக்கப்பட்ட சிறிது காலத்துக்குள்ளே எமது தாயக வலைப்பந்தாட்ட அணி இங்கிலாந்து சென்று, வெற்றியை ஈட்டித் தந்துள்ளது. இதேபோன்று சகல விளையாட்டுகளும், வீரர்களை சர்வதேச ரீதியாக நடைபெறும் போட்டிகளில் பங்குபெற நாம் வாய்ப்புச் செய்து தருவோம்.

இன்று எமது வீரர்கள்தேசிய ரீதியில் புறக்கணிக்கப்படுகின்றார்கள். இது ஓர் திட்டமிடப்பட்ட ஓர் செயலாகவே நாம் கருதுகின்றோம். தமிழனாய்ப் பிறந்த ஒரே காரணத்தினால் எமது இனம் ஒடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

எமது சமூகம் இராணுவத்தின் செயற்பாட்டால் விலைபோகின்ற நிலை முற்றிலும் மாறவேண்டும். தமிழ் தேசியம் என்ற ஒன்று எமது பூர்வீக இனம். அது ஒருபோதும் எவருக்கும் அடிபணியக்கூடாது என்பதனை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். 17780 மாவீரர்களின் தியாகத்தினால் உருவானதுதான் இந்தத் தேசியம். இந்தத் தேசியத்தில் நாம் எவருக்கும் அடிமையாக வாழ முடியாது. மாவீரர்களின் பாதையில் எமது தமிழினம் மிகவிரைவில் தலைநிமிர்ந்து நிற்கும் எனத் தெரிவித்தார்.


## பிரத்தியேக பாதுகாப்புச் சேவை -2005
## வடபிராந்திய போக்குவரத்துச் சபை

வடபிராந்தியபோக்குவரத்துச் சபையின் சாலைகளிற்கான பாதுகாப்புக் கடமைக்காக பிரத்தியேக பாதுகாப்பு சேவையினரிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதன் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. யாழ்.சாலை | காலை | 0600-1800 | - 05 பேர் |
| | மாலை | 1800-0600 | - 06 பேர் |
| 2. யாழ்.பேரூந்து நிலையம் | காலை | 0600-1800 | - 03 பேர் |
| | மாலை | 1800-0600 | - 02 பேர் |
| 3. பருத்தித்துறைச்சாலை | காலை | 0600-1800 | - 03 பேர் |
| | மாலை | 1800-0600 | - 03 பேர் |
| 4. காரைநகர்ச் சாலை | காலை | 0600-1800 | - 03 பேர் |
| | மாலை | 1800-0600 | - 03 பேர் |
| 5. மன்னார் சாலை | காலை | 0600-1800 | - 04 பேர் |
| | மாலை | 1800-0600 | - 04 பேர் |

ஒவ்வொருசாலைகளிலும் பாதுகாப்புக்கடமை புரிவதற்கு 01 நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருவருடைய வேதனத்தைக் குறிப்பிடவும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் :

1. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரத்தியேக பாதுகாப்புச்சேவை 2005" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் "பொது முகாமையாளர், வ.பி.போ.சபை, பலாலி வீதி, கோண்டாவில" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
2. சேவைகள் திருப்தியற்றதாகக் காணும் பட்சத்தில் ஒருமாத கால முன்னறிவித்தலுடன் சேவை இடைநிறுத்தம் செய்யப்படும்.
3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப ·வத்தோடு இணைத்தல் வேண்டும்.

1. பெயரும் விலாசமும்
2. தொலைபேசி இல
3. சேவைப்பதிவின் இலக்கமும் திகதியும்
4. சேவையின் தன்மை
5. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம்
6. வங்கியின் பெயர்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 2004.12.15

குறிப்பு: கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

க.கணேசபிள்ளை
பொதுமுகாமையாளர்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்.

(C/3412)


## தேசியத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு அமெரிக்காவிலும் பிரார்த்தனைகள்

(நியூயோர்க்)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது அகவையை முன்னிட்டு அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களிலும் விசேட பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

அமெரிக்காவில் உள்ள உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் பிரார்த்தனைகள் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இந்து ஆலயங்களில் இடம் பெற்றன.

நியூயோர்க், சிக்காக்கோ, லொஸ்ஏஞ்சல்ஸ், சக்ரமொன்ரோ, சான்பிரான்ஸ்சிஸ்கோ, புளோரிடா மற்றும், ஒஹேயோ ஆகிய மாநிலங்களில் இந்தப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

இந்தப் பிரார்த்தனைகளில் விடுதலைப்புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.








திறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், பிரதியுஷா நடித்த
சவுண்ட் பார்ட்டி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேநாள் வெளியீடான
அஜித் இரு வேடங்களில்
பூஜா நடித்த



அட்டகாசம் (ரீல்ஸ்)
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
பி.பி.சௌந்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல்
நடித்த



சத்ரபதி
கா.நே. 11.00, 2.00, 7.00, 10.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
(குளிரூட்டப்பட்டது)
2வது வெற்றிவாரம்
தனுஷ், பிரியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
கா.நே. 10.30 2.30 6.30 9.00 (பு.நே)

Hair Formula
Supplement Capsules
தலைமயிர் உதிர்தல், இளநரையையும் தடுத்து ஆரோக்கியமான கரும் நிற கூந்தல் வளர்ச்சிக்கும், முகத்தில் கறும்புள்ளி முகப்பறுக்களை தடுத்து சருமத்திற்கு பளபளப்பையும் கொடுக்கவல்லது.
Hair Formula Supplement Capsules
With 15 Vitamins & Minerals Including Vitamin E, Biotin, Calcium-Pantothenate.
Hair Formula என்றே கேட்டு வாங்குங்கள்
CCS
சாப்பிட்ட உடன் ஒரு வில்லை
யாழ் நகரில் விநியோகஸ்தர்கள் தேவை
K.S.P. International Pharmacy Tel : 2449766


## கண்ணீர் அஞ்சலி

### பாலையா நிர்மலகாந்தன் (யூலி)



நண்பன் நிர்மலகாந்தனின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த கவலை அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், சுற்றத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அமரரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.
ஊர்காவற்றுறை.

ஊர்காவற்றுறை. (994)

## மரண அறிவித்தல்

### திரு. காசித்தம்பி கந்தசாமி

(ஓய்வுபெற்ற மலேரியா தடை வெளிக்கள உத்தியோகத்தர்)

சிவன்கோவில் வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப் பிடமாகவும், இல: 117/13 குட்செட் வீதி, வவுனியாவை வசிப்பிட மாகவும் கொண்ட திரு.காசித்தம்பி கந்தசாமி 26.11.2004 வெள்ளிக்கிழமையன்று வவுனியாவில் காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான காசித்தம்பி சேதுப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், டிக்கோயா நாகலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம் சென்ற திருமதி சிவஞானத்தின் அன்புக் கணவரும், பிரபாலினி (ஆசிரியை - வவுனியா தமிழ் ம.ம.வி), சுபாஸ்கரன் (பிரான்ஸ்), ச.ரேஸ்கரன் (நோர்வே), சுதேஸ்கரன் (ஆசிரியர் - வவுனியா ஒலுமடு அ.த.க பாடசாலை நெடுங்கேணி), சுபாலினி (ஆசிரியை - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வரதராஜன் (மட்டுவில் தெற்கு சாவகச்சேரி), லாதா பிரான்ஸ்), திலகா (நோர்வே), வசந்தகுமார் (துபாலகம் - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், உமையாள் (வவுனியா - இறம்பைக்குளம் மகளிர் ம.வி), கௌதமன், கௌசல்யா (பிரான்ஸ்), கௌசிகா, காவியா (நோர்வே), சுபாங்கன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.11.2004 திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெற்று, நல்லடக்கத்துக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்
தகவல் : கந்தசாமி சுதேஸ்கரன்
(கண்ணன்-மகன்)

(C/3413)

*(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஏற்படும்போதுதான் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பெருந்தொகைக் கடனுதவி கிடைக்குமென்ற நிர்ப்பந்தம் மறுபுறமும், பாதாளம் நோக்கிச் சரிந்து செல்லும் இலங்கையின் பொருளாதாரம் இன்னொரு புறமுமாக, சந்திரிகாவின் அரசு பலமுனைகளில் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது.

இந்த நெருக்கடிக்கு முகம்கொடுப்பதாயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அரச கூட்டணிக்குள் நிலவும் உள்முரண்பாடும், அடிப்படையான கொள்கை வேறுபாடும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குப் பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப் பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம்வகிக்கும் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ பொதுவான அணுகுமுறையோ இருக்கவில்லை.

தமிழர் விரோத இனவாதத்திலும், போர்வெறி பிடித்த இராணுவவாதத்திலும், சிங்களப் பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித்திளைத்த தீவிரவாதச் சக்திகளுடன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை.

இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்தநிலை. அரச கூட்டணிக்குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மையானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டுவருகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் நாம் நிகழ்த்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக் கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்தோம். அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து உடன் பேச்சுக்களைத் தொடங்கலாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஆதரிக்கிறது. ஆனால் எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகையான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒரு நிரந்தரமான தீர்வுத் திட்டத்தின் இணைபிரியாத அங்கமாக அமைய வேண்டும் என வலியுறுத்துகிறது. நாம் ஒர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டிநிற்க, சந்திரிகாவின் அரசு இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பற்றி பேச விரும்புகிறது.

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெறவேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நீண்ட காலமாகத் தொடர்ந்த கொடிய போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்துவருகிறார்கள்.

போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந்தொகையில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும் அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக் கட்டி யமைக்கவும் தகுந்த அதிகாரங்களு டன் வடகிழக்கில் ஒர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

போர்நிறுத்தம்செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்தியபோதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கி வருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவேண்டுமென்பதையே எமது மக்கள் அவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள்.

எனவே தான், நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவ வேண்டுமென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோசனைகளிற் சில சர்ச்சைக்குரியனவாகத் தென்பட்டால் அவைபற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் விவாதித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச் செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுபற்றிப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே எனது நிலைப்பாடு.

எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தாயகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக் கருத்திற்கொண்டே நாம் இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றிப் பேசவருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகிறார். எந்த வடிவத்திலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், முழுமையான நிரந்தரத் தீர்வுத்திட்டத்தின் அங்கமாக அமைய வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என அவர் வலியுறுத்துவதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம்.

முதலாவதாக, அரசுக் கூட்டணிக்குள் அங்கம்வகிக்கும் தீவிரவாத இனத்துவேச சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பியினரைச் சமாதானப் படுத்தும் நோக்கமாக இருக்கலாம்.

இரண்டாவதாக, தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை கொண்டவர் போன்று சர்வதேச சமூகத்திற்கு ஏமாற்று வித்தை காட்டுவதற்காக இருக்கலாம்.

மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப்பிரச்சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கிற் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம்.

இப்படிப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றைமட்டும் நாம் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது, சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைப் பார்க்கும்பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஒர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுவேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத்தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்தில் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது.

மொழியுரிமை என்றும் சமஉரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங்காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீளநடைபோட எமது விடுதலை இயக்கம் தயாராக இல்லை.

சிங்கள, பௌத்த பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை. சிங்களத் தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக் கூட




அங்கீகரிக்கத் தயாராக இல்லை.

வடகிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ, தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசெல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ, எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணககூடியதாக இருக்கிறது.

இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக்கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது.

அதாவது, தமிழ் மக்களது இனப் பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும் நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால், எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுபற்றிப் பேச்சு வார்த்தை நடத்துவதில் அர்த்த முண்டு. அல்லாதபட்சத்தில், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை.

தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப்போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத் தோம்.

எமது மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத்திட்டத்தை முன்வைத்து, பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சந்திரிகாவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராகரித்து, நிரந்தரத் தீர்வு என்ற சாக்குச் சொல்லி, சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது.

சமாதானத்தின் விரோதிகளையும் இனவாத சக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையுந் தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடி மறைத்து, விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச் சர்வதேச சமூகம் அடையாளம் கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக் கிடக்கமுடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழ முடியாது.

பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் சிறீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

*(12 ஆம் பக்கம் பார்க்க)*

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



மட்டு. தரவை துயிலும் இல்லத்தில் தளபதிகள் ரமணன், பிரபா, பானு, ஜெயார்த்தன், நாகேஷ்.



தரவையில் ஈகச்சுடரேற்றும் கேணல் பானு!



மட்டு. தாண்டியடி துயிலும் இல்லத்தில் ஈகச்சுட ரேற்றுகிறார் தளபதி ராம்.



கஞ்சிக்குடிச்சாறு துயிலும் இல்லத்தில் ஈகச் சுடரேற்றுகிறார் தளபதி ஜனார்த்தனன்!

# ஆழ ஊடுருவும் படையணியின் இராணுவச் சீருடைகள் மாயம்!

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆழ ஊடுருவித்தாக்கும் படையணிக்கென அமெரிக்காவிலிருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி இராணுவச் சீருடைகள் மர்மமான முறையில் காணாமற் போய்விட்டதாக இராணுவ உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

சீருடைகள் காணாமற்போன விவகாரம் இராணுவ உயர்மட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவால் உருவாக்கப்பட்ட இந்த விசேட படையணிக்கென அமெரிக்காவிலிருந்து மிக இரகசியமான முறையில் இந்த விசேட சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்தச் சீருடைகள் தொடர்பாக கடந்த 2001ஆம் ஆண்டு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாக பதவிவகுத்தவர் அனுப்பிய தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆரம்பகட்ட விசாரணைகளில் குறிப்பிட்ட நிலையத்தின் கட்டளை அதிகாரியை விசாரித்தபோது அவர் சீருடைகள் அதிரடிப்படையின் முகாமுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார். அதன்படி மூன்று வருடங்களாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால், அந்தச் சீருடைகள் காணாமல் போயுள்ளதாக தற்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்தச் சீருடைகள் புலிகளின் கைகளுக்குச் சென்றுவிட்டனவா என்பது குறித்து இராணுவ வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்த விசாரணைகள் தற்போது முழு அளவில் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைகள் ஒருபுறமும் இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரில் இராணுவப் பொலிஸாரின் விசாரணைகள் மறுபுறமும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

# சம்பந்தனின் மகன் மீது தாக்குதல்!

திருகோணமலை சிறிமாபுரம் வீதியில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் மகனான அரவிந்தன் (வயது 23) அவரது உதவியாளரான கோபால் (வயது 54) இருவரும் இனந்தெரியாதேரின் தாக்குதலுக்கு இலக்கானதில் சிறு காயமடைந்தனர்.

நேற்றிரவு 7.10 மணியளவில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அலஸ்தோட்டப் பகுதியிலுள்ள தமது வளவினைப் பார்வையிட்ட பின்னர் அரவிந்தனும் அவரது உதவியாளரும் ஓட்டோ ஒன்றில் வந்த வேளை - சிறிமாபுரம் வீதியில் வைத்து இனந்தெரியாதவர்கள் இவர்களை வழிமறித்து தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்தவேளை - இவர்கள் கூக்குரலிடவே அருகிலிருந்த படையினர் சம்பவ இடத்துக்கு வந்தனர். அவ்வேளை தாக்குதல் நடத்தியவர்கள் அந்த இடத்திலிருந்து தப்பிச்சென்று விட்டனர்.

ஆனால், தம்மீது இனந்தெரியாதவர்கள் கிரனைட் வீசித்தாக்குதல் நடத்தியதாகவும் அதில் காயமடைந்ததாகவும் சில ஊடகங்களில் வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென அரவிந்தன் 'நமது ஈழநாடு' விற்குத் தெரிவித்தார்.

# குளிக்கச் சென்றவர் நீரிழ் மூழ்கிப் பலி!

ஊர்காவற்துறையில் குளத்தில் குளிப்பதற்காகச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். பாலையா நிர்மலகாந்த் (வயது 22) என்பவரே மரணமடைந்தவராவார்.

தட்டாதெருச்சந்தி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் புதுக்குடியிருப்பில் வசித்துவந்தார். இவர் நண்பர் ஒருவரின் வீட்டில் வந்து நின்ற வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சடலம் ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (51)

# முதன்மைச் சுடரேற்றி....

வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை புலிகளின் நில அளவைப் பொறுப்பாளர் சசிக்குமார் ஏற்றிவைத்தார்.

ஆலங்குளம் துயிலும் இல்லத்தில் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா பொதுச்சுடரை ஏற்றினார்.

விசுவமடு துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை தளபதி கேணல் ரமேஷும், உடுத்துறை துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணியும் ஏற்றிவைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றினார்.

முல்லைத்தீவுக் கடலில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட படகொன்றில் பொதுச்சுடரை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசையும், மணலாறு நிசாம்வெட்டை மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை தளபதி கேணல் ஆதவனும், புனித பூமி மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி மகேந்தியும் ஏற்றினர்.

மன்னார் மாவட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரனும், ஆட்காட்டிவெளி துயிலும் இல்லத்தில் வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயமும் முள்ளிக்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் முள்ளிக்குளம் பிரதேசப் பொறுப்பாளர் ரஞ்சனும் ஏற்றிவைத்தனர்.

வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

திருகோணமலை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணமும், பெரியகுளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திருகோணமலை வடக்கு தளபதி குணமும், தியாகவனம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திருகோணமலை மத்தி தளபதி வரனும், உப்பாறு மாவீரர் துயிலும் இல்லத்த்தில் திருகோணமலை மத்திய பகுதித்தளபதி விமலராஜும் பொதுச்சுடரை ஏற்றினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை - கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் பால்ராஜ், தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டு - அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானு, தாண்டியடி மாவீரர் துயிலம் இல்லத்தில் மட்டு - அம்பாறைத் தளபதி ராம், மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவடி முன்மாரி கோட்ட துணைத் தளபதி யோகராஜா, அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிக்குடிச்சாறு துயிலும் இல்லத்தில் மாவட்டத் தளபதி ஜனார்த்தனன் ஆகியோர் பொதுச் சுடரை ஏற்றினார்.

இதேவேளை - மாவீரர் நாளான நேற்று கிளிநொச்சி சந்திப் பகுதியில் ஓயாத அலைகள் 2 நடவடிக்கையின் கல்வெட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது.

அத்துடன் ஒட்டுசுட்டான் சந்திப் பகுதியிலும் மணலாறு மாவட்ட முன்னாள் தளபதி லெப்.கேணல் அன்புவின் நினைவுத்தூபி நேற்று திரைநீககம் செய்துவைக்கப்பட்டது. (03,07,04,10)

# லட்சக்கணக்கான மக்கள் மாவீரர்களுக்கு...

உரித்துடையோர் மாவீரர்களுக்கான ஈகச் சுடர்களை ஏற்றினர்.

தென்மராட்சிக்கான மாவீரர் தின நிகழ்வு கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் இடம்பெற்றது. முன்னதாக மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் துயிலுமில்லத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மாலை 5.40 இற்கு தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை ஒலிபரப்பப்பட்டு 6.05 இற்கு நிறைவடைந்ததும் நினைவொலி எழுப்பப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து துயிலுமில்லப் பொதுச்சுடரினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார். பின்னர் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மாவீரர்களின் நினைவுக்கற்கள், கல்லறைகளுக்கான ஈகச் சுடர்களை ஏற்றினர்.

வடமராட்சியில் எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்று மாலை 3.00 மணியவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கௌரவிக்கப்பட்டனர். இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் விடுதலைப் புலிகளின் படைத்துறைப் பள்ளிப் பொறுப்பாளர் அரசண்ணா, மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கரணவாய் நாச்சிமார் கோவிலடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் துயிலுமில்லம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மாவீரர்களின் கல்லறைகளுக்கும் நினைவுக் கற்களுக்கும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதன்பின்னர் மாலை 5.40 மணிக்கு தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை ஒலிபரப்பப்பட்டது. தேசியத் தலைவரின் உரை 6.05 மணிக்கு நிறைவடைய நினைவொலி எழுப்பப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதன்பின்னர் துயிலுமில்ல பொதுச்சுடரினை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார். பின்னர் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மாவீரர்களுக்கான ஈகச் சுடர்களை ஏற்றினர்.

தீவகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் இடம்பெற்றது.

நேற்றுமாலை 4.30 மணியளவில் சாட்டி மாதா ஆலய முன்றலில் இருந்து மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் வேலணை சேர்.துரைசுவாமி மத்தியமகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுபபுடன் மாவீரர் துயிலுமில்லம் அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் மாவீரர்களின் கல்லறைகளுக்கும், நினைவுக்கற்களுக்கும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து 5.40 மணியளவில் தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை ஒலிபரப்பப்பட்டது. இந்த உரை நிறைவடைய 6.05 மணிக்கு நினைவொலி எழுப்பப்பட்டது.6.06 மணிக்கு அகவணக்கமும் 6.07 மணிக்கு சுடரேற்றலும் இடம்பெற்றது.

இங்கு துயிலுமில்லத்துக்கான பொதுச் சுடரினை தீவக கோட்ட அரசியற்துறை சிறப்புப் பொறுப்பாளர் நா.கண்ணன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து மாவீரர்களது கல்லறைகளுக்கும் நினைவுக்கற்களுக்கும் ஈகச்சுடர்களை மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் ஏற்றினர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் மாவீரர்தின நிகழ்வுகள் நெடுந்தீவிலுள்ள தனிநாயக அடிகள் கலையரங்கில் சிறப்பாக அமைக்கப்பட்ட அரங்கில் இடம்பெற்றது.

இந்த அரங்கில் அமைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவிடங்களுக்கு பெற்றோரும், உரித்துடையோரும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதன்பின்னர் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை ஒலிபரப்பப்பட்டது. தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை நிறைவடைந்ததும் நினைவொலி எழுப்பப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.ரங்கன் பொதுச் சுடரை ஏற்றினார். தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடர்களை ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வு நிறைவடைந்ததும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர்களுக்கு மாவீரர்கள் நினைவாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.(51,99,113,14,12,34,29,201)

# உடனடியாகப் பேச்சுக்கு....

**எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.**

**எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலகநாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.**

**எமது மண்ணின் வீடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர்களை நினைவுகூரும் இப் புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக் கனவை, எத்தகைய இடர்கள், சாவல்களை எதிர்கொண்ட போதும் நிறைவுசெய்வோமென நாம் உறுதிபூணுவோமாக.**

**புலிகளின் தாயகம் தமிழீழத் தாயகம்**

## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் பிரகாசம்

நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசீர்வாதம் பிரகாசம் கடந்த 26.11.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், அன்ரன் தவமலர், யோர்த்நாயகி, அருமைராஜா, ஆகியோரின் அன்புத் தாயாரும், யேசுராஜா (மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை), லூர்து நேசன் (ராஜா ரயர் வேக்ஸ், நெல்லியடி), மேரி ஜடா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது பூடவுடல் இன்று (28.11.2004) காலை 10 மணிக்கு நல்லடக்கத்துக்காக அன்னாரது இல்லத்திலிருந்து கீரிப்பல்ள சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் : ஆ.அருமைராசா. (மகன்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.